விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 மாசி 1 றவி ஆகிர் 18 இதழ் 2
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 13-2-82

## போலந்து விமானம் கடத்தப்பட்டது!

வார்சோ, பெப். 12
போலந்து விமானமொன்று 19பயணிகளுடனும் 4 விமான சிப்பந்திகளுடனும் மேற்கு பெர்லினிற்கு இன்று கடத்திச் செல்லப்பட்டதாக அறிவிக்கப் பட்டது.

போலந்தில் இராணுவ ஆட்சி இடம்பெற்ற பின்னர் விமானமொன்று கடத்தப் பட்டது இதுவே முதல் தடவையாகும். (வெ)

### விசாரணையை நிறுத்த உத்தரவு

புதுடில்லி, பெப். 12
எரிசாராய ஊழல் குறித்து ஆராய கேரள அரசினுல் நியமிக்கப்பட்ட சதாசிவம் கமிஷனின் விசாரணைகளை நிறுத்துமாறு உயர்நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது. (வெ)

### பங்களாதேஷ்: புதிய அமைச்சரவை

டாக்கா, பெப். 12
பங்களாதேஷ் ஜனுதிபதி ஜனுப் அப்துல்சதார் 18 உறுப்பினர்களைக் கொண்ட புதிய அமைச்சரவையொன்றை அமைத்துள்ளார்.

இப்புதிய அமைச்சரவையில் முன்னைய அமைச்சரவையில் இடம் பெற்ற ஒன்பது பேரும் இடம் பெற்றுள்ளனர்.

(8ம் பக்கம் பார்க்க)

★ குற்றச்செயல்கள் பற்றி

# ரகசியத் தகவல்கள் பொலிஸார் மூலமே வெளியேறுகிறதாம்!

## உயர்மட்ட விசாரணையில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

பல்வேறு குற்றச் செயல்கள் சம்பந்தமாக பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெறும் இரகசியத் தகவல்கள் வெளியேறுவதற்கு, குறிப்பிட்ட சில பொலிஸ் உத்தியோகத்தர்கள்தான் காரணமாக இருக்கின்றுர்கள் என்பது பொலிஸ் உயர்மட்ட விசாரணைகளிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் எதிரொலியாக, 'வேலியே பயிரை மேயும்' இந்தச்செயலை உடனடியாக நிறுத்துவதற்கு இப்பொழுது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பயங்கர மற்றும் பல்வேறு குற்றச்செயல்கள் சம்பந்தமாக பொதுமக்களிடமிருந்து பொலிசாருக்கு நம்பிக்கையான இரகசியத் தகவல்கள் கிடைத்து வந்தபோதிலும் விரைவாகவே இத் தகவல்கள் எப்படியோ வெளியேறிவிடுகின்றதாம்.

பொலிசாருக்கு தொடர்ந்து ஏற்பட்டுவரும் இத் 'தலையிடி' குறித்து பொலிஸ் உயர்மட்ட அளவில் விசாரணைகள் நடைபெற்றன.

இந்த விசாரணைகளிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவல்கள், பொலிஸ் உயர்மட்டக் குழுவினருக்கே பெரும்அதிர்ச்சியை ஏற்படுத்தியதாம்.

இது சம்பந்தமாக பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கு விடுத்துள்ள சுற்றறிக்கையில்; பொதுமக்களிடமிருந்து கிடைக்கும் இரகசியத் தகவல்கள்; மிகவும் கவனமாகப் பாதுகாக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

பல்வேறு குற்றச்செயல்கள் மற்றும் சம்பவங்கள் பற்றி பொதுமக்களிடமிருந்து கிடைக்கும் இரகசியத் தகவல்கள் கடதாசியில் எழுதப்பட்டதும் ஒரு காகித உறையில் வைக்கப்பட்டு, பக்குவமாக முத்திரையிடப்பட்டு பாதுகாப்பான இடத்தில் பாதுகாக்கப் படவேண்டும் என்றும், இந்த இரகசியத் தகவல்கள் எந்த வகையிலும்வெளியேறக்கூடிய சூழ்நிலை உருவாகக்கூடாதென்றும் தகவல்தரும் பொதுமக்களைப் பாதுகாக்கவேண்டியது பொலிஸாரின் மிகப் பெரியகடமை என்றும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் பணித்துள்ளார்.

இது மீறப்படும் பட்சத்தில் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

### போல்க்கமிஷன் விவாதம்

சென்னை, பெப். 12
திருச்செந்தூர் ஆலய தர்மகர்த்தா சுப்பிரமணியபிள்ளையின் மரணம் தொடர்பான போல்க்கமிஷன் அறிக்கை

8-ம் பக்கம் பார்க்க)

## இந்திராகாந்தியை யோகேஸ் சந்திப்பார்

சென்னை, பெப். 12
தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்துள்ள யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் இவ்வார இறுதியில் புதுடில்லிக்கு விஜயம்செய்வார்.

புதுடில்லியில் தங்கியிருக்கும்போது எதிர்வரும் திங்கட்கிழமை இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியை திரு. வெ. யோகேஸ்வரன் சந்திப்பார்.

### ஷாவின் கதிதான் ஏற்படுமாம்

தெஹ்ரான், பெப். 12
''ஜோர்டான் மன்னர் ஹுசைன் வளைகுடா யுத்தத்தில் ஈராக்குக்கு அளித்துவரும் ஆதரவை வாபஸ் பெறுவிட்டால் ஈரானிய ஷாவுக்கு நேர்ந்த கதியே அவருக்கும் கிடைக்கும்''.

மேற்கண்டவாறு ஈரானிய மதத்தலைவர் அயத்தொல்லா கொமெய்னி ஈரானின் 3-வது புரட்சி ஆண்டைக் குறிக்குமுக

(8ம் பக்கம் பார்க்க)

## மேல்நீதிமன்ற நீதிபதியாக பாலகிட்ணர் பதவி உயர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாட்ட நீதவான் திரு. கி. பாலகிட்ணர் மேல் நீதிமன்ற நீதிபதியாகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

திரு. பாலகிட்ணர் நாளைமறுதினம் திங்கட்கிழமை கொழும்பில் பிரதமநீதியரசர்முன்னிலையில் மேல் நீதிமன்ற நீதிபதியாக சத்தியப்பிரமாணம் செய்துகொள்வார்.

நேற்று திரு. பாலகிட்ணர் யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் கடைசித் தடவையாகக் கடமையாற்றினுர். அவரது சேவைகளைப் பாராட்டி சட்டத்தரணிகள் சார்பில் நீதிமன்றத்தில் சிரேஷ்டசட்டத்தரணியான திரு. ஆர். என். சிவப்பிரகாசம் உரையாற்றினுர்.

திரு. கி. பாலகிட்ணர் தமது பதவிக்காலத்தில் கண்ணியமாகவும், நேர்மையாகவும் சகலரதும் பாராட்டைப் பெறும் விதத்தில் பணிபுரிந்தார்என்று திரு. சிவப்பிரகாசம் கூறினுர்.

நிர்வாக அலுவல்கள் அனைத்திலும்

## தமிழ் ஆட்சிமொழி

சென்னை, பெப். 12
''தமிழ் நாட்டின் நிர்வாக அலுவலகங்கள் அனைத்திலும் அடுத்த ஆண்டு இறுதிக்குள் தமிழ் ஆட்சி மொழியாக்கப்பட்டுவிடும்'' என்று தமிழ் நாடு கல்வியமைச்சர் திரு. ஸி. அங்கநாயகம் சட்டப் பேரவையில் இன்று தெரிவித்தார்.

பதினேழுதுறைகளில் தமிழ் நிர்வாக மொழியாக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (வெ)

Today is Saturday . . . .

A day for

Saturday Review SRI LANKA

## பஸ்டிக்கட் சீட்டிழுப்பு முடிவுகள் நாளை வெளிவரும்

(யாழ்ப்பாணம்)

பஸ் டிக்கட்டுகளுக்கான மாதாந்தப் பரிசளிப்புத் திட்டத்தின் கீழ் வடபிராந்திய போக்குவரத்துச் சபையினுல் நடத்தப்பட்ட முதலாவது மாதாந்த பஸ் பிரயாணச் சீட்டிற்கான சீட்டிழுப்பு பரிசுகள் அடுத்த மாதம் ஆறும் திகதி வழங்கப்படும்.

யாழ். திறந்தவெளி அரங்கில் ஆறும் திகதிமாலை நடைபெறும் வண்ணமிகு கலை நிகழ்ச்சிகளில் போக்குவரத்து அமைச்சர் ஜனுப் எம். எச். மொகமட் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டு சீட்டிழுப்பில பரிசு பெற்றோருக்கு பெறுமதிமிக்க பரிசுகளை வழங்குவார்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையினுல் நடத்தப்பட்ட சீட்டிழுப்பின் முடிவுகள் நாளைய 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவரும்.

**மணிவாக்கு**

பொய்சொல்பவன் கடவுளிடம் தைரியசாலியாகவும் மனிதர்களிடம் கோழையாகவும் இருக்கிறான்.

... பிரெஞ்சு தத்துவமேதை மொன்தேன்.

# நமது நோக்கு

## நீரில் காத்திருக்கும் காலன்

இந்தப்போன நான்கு கொழும்பு பிரபலக்கல்லூரி மாணவர்கள் களனி ஆற்றுக்குப் பலியான செய்தி உண்மையில்சோகமானதே!

இது ஒரு முன்னேற்பாடான பொழுதுபோக்கல்லவென்றும், கிரிக்கெட் ஆட்டம் பார்க்கவந்தவர்கள் ஆட்டம் பிற்போடப்பட்டதால், களனி ஆற்றில் குளித்துக் களிப்படையலாமென்று வெளிக்கிட்ட பயணம் இது என்றும் சொல்லப்படுகிறது.

மீளாப்பயணத்தில், நீரில் காத்திருந்த காலனைச் சந்திக்க நேரிட்டது அவர்களுடைய குடும்பத்தினருக்கு மட்டுமல்ல அதனைக் கண்டவர் கேட்டவர் எல்லோருக்கும் ஒரு திகிலளிக்கும் துன்ப சம்பவமாகும்.

நீந்த விரும்பிய மாணவர்கள் நால்வரும் அதில் நிரம்பிய பயிற்சியற்றவரென்றும் கூறப்பட்டிருக்கிறது. அது எவ்வாறாயினும் பயிற்சியில் முதிர்ச்சியடையாதவர் தாம் நிபுணர் என்று நினைப்பது இயல்பு. எனவே அந்தக் கூற்றில் உண்மை இருக்கலாம்.

ஆயத்தமற்ற, சமயோசிதமான களிப்புநிகழ்ச்சிகள் ஆபத்தில் முடிவதும் உண்டு.

சோகத்தின் சிகரம் எங்கு என்று கேட்டால், அவர்களில் ஒருவர் நீர்ச்சுழியில் அகப்பட்டுத் தத்தளிக்கும் போது, மற்றைய மூன்று நண்பர்களும் அவரைத் தப்பவைக்க எத்தனித்தனர். நால்வரும் நீருக்கே பலியாகினர். நிலத்தில் மட்டுமல்ல நீரிலும் காலனின ஆட்சி கொடிது!

இந்தக் கோரவிபத்தைக் கேள்வியுற்றவர்கள் பிரிட்டிஷ் பிரதமர் காலஞ்சென்ற வின்ஸ்டன் சேர்ச்சில் எழுதிய 'எனது அருந்தப்பு' என்ற கட்டுரையை நினைவுகூர்வது இயல்பு; கல்லூரியிலிருந்து விடுதி அதிபரின் அனுமதியின்றி வெளிக்கிட்ட சேர்ச்சிலும் இன்னொரு நண்பரும் கடலில் வள்ளம் வலித்து விளையாடினர். ஓர் எண்ணம் வந்தவுடன் சடுதியாகக் கடலில் இறங்கி நீந்த முயன்றனர். சேர்ச்சில் கல்லூரியின் நீச்சல்வீரன்; ஆயினும் அன்று கரையில் இருந்து ஒருமைல் தூரத்துக் கப்பல் கடலில் ஒருவித உதவியுமின்றி சடுதியில் எழுந்த கடுங் காற்றுக் காரணமாக உயிர் இழக்குந் தறுவாயிலிருந்த பயங்கரக் கதைபோன்றது இது.

தான் முன்னே பின்னே காணாத காலனை அன்று சேர்ச்சில் கண்டாரென்றால், அவன் பிடியிலிருந்து தப்பியது தனது நாட்டை பிற்காலத்தில் ஹிட்லரின் கொடுமையிலிருந்து காப்பாற்ற ஆண்டவன் வகுத்த திட்டமென குறிப்பிடுகிறார்.

அது எவ்வாறாயினும் ஆற்றில் எவ்வித உதவியுமின்றி நீந்தல் போன்ற களியாட்டத்தில் ஈடுபடுபவர்கள் பலர் இவ்வாறு மாண்டு போகின்றனர்,

பதினேழு வயது மாணவர் நால்வர் எவ்வித அபசகுனமுமின்றி உதவிக்கு வர ஒருவருமின்றி, உயிர் காப்பாற்றும் கருவி எதுவுமின்றி அகாலமுடிவைத் தழுவியது நகராட்சியாளரின் அவசிய கவனத்துக்குரியது.

## என்னே துயிலின் பரிசு!

பாண்டிய மன்னனுக்கு பிரதமராக (ஜனாதிபதி ஆட்சி இல்லாக்காலம்) கடமையாற்றிய, சைவ உலகம் போற்றும் மாணிக்கவாசகசுவாமிகளின் கூற்றே எமது தலையங்கம்.

நித்திரையில் காலம்கழிக்கும் கன்னியர்களைத் தட்டி எழுப்பும் கூற்று இது.

இதனையே நாட்டின் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா அண்மையில் நடைபெற்ற தமது கட்சிப் பாராளுமன்றக் குழுவின் கூட்டத்தில் ஒரு அபாயச் சங்கு போல் வழங்கியிருக்கிறார்.

பதினெட்டு அரசியல் கட்சிகள் தேர்தல் அதிகாரியிடம் கட்சி அங்கீகாரம் கோரி விண்ணப்பித்திருக்கின்றன. இதனைப்பற்றிய கவலை அங்கத்தவர்களுக்கு அதிகம் இல்லை. ஒரு மைல் பிர்திய ஓட்டத்தில் பலரும் ஓடுவதுவழக்கம். மூன்றாவது அல்லது நாலாவது 'றவுண்டில்' பலர் படுத்துவிடுவதும் வழக்கம். ஆயினும் வெல்வோமென்று வீரம் பேசுபவர் தோற்பதும் உண்டு.

அது எவ்வாறாயினும் இன்று ஸ்ரீலங்கா சுதந்திரத்தால் தங்களுக்கு அபாயம் இல்லையென்றும், ஜாதிக விமுக்தி பெரமுனவே கடும் போட்டியில் இறங்குவதாக முறையிட்டனர்.

ஜனாதிபதியின் கைபிடியில் அவர்கண்ட நோய்க்கு உடனடி மருந்து 'நித்திரைவிட்டெழுதல்.'

தம்முடைய கடந்தகால அனுபவத்தைவிளக்கி 'விழிமின் எழுமின் எடுத்த காரியம் கைகூடும்வரை உழைமின்' என்று சுவாமி விவேகானந்தாபோலவும், தம்முடைய சகாக்களின் சோம்பலைக்கண்டு 'என்னே துயிலின் பரிசு!' என்று மாணிக்கவாசகசுவாமிகள் போலவும் அறிவுரை வழங்கியிருக்கிறார்.

முத்துக்கள் போன்ற இவ்வுரையைக் கேட்டவர் யார்? உண்மையில் நித்திரை கொள்பவரோ அல்லது நித்திரைபோல் கிடப்பவரோ? பைபிளில் வருங்கூற்றுஒன்று இதற்குப் பொருத்தமோ?

## 19-ம் நூற்றாண்டில்

# அமெரிக்க மிஷனரிகள் ஆற்றிய அறிவுப்பணி

"புத்தம் புதிய கலைகள், பஞ்சபூதச் செயல்களின் நுட்பம் விளக்கிடும் நூல்கள், மெத்த வளருது மேற்கே, அந்த மேன்மைக்கலைகள் தமிழினில் இல்லை'' என்ற தமிழ்க் காவியம் மகாகவி பாரதியாரின் இதயத்து ஒலி, சென்ற நூற்றாண்டின் முற்பகுதியிலேயே, 1816 ஆம் ஆண்டில் இலங்கை மண்ணில் காலடி எடுத்து வைத்த, அமெரிக்க மிஷனரித் தொண்டர்களின் இதயங்களிலும் ஓங்கி ஒலித்திருக்க வேண்டும். இறையியற் பணி புரிய வேண்டி இலங்கையின் வடபகுதியாம் யாழ்ப்பாணத்தினை வந்தடைந்த மிஷனரிமார் தமிழ் மொழிக்கு நவீன அறிவியலினை அறிமுகப்படுத்தி, தமிழில் அறிவியல் நடைபயின்று வளரும் வகையில் அதனை வளப்படுத்தி, வழிகாட்டித் ''தமிழில் அறிவியல்'' எனும் சகாப்தத்தினைப் பெற்றெடுத்தனர் என்று கூறின் அது மிகையாகாது.

மூத்த அமெரிக்க மிஷனரிகளிலொருவரான வண. கலாநிதி டேனியல் புவர் தலைமையில் 1823 இல் ஆரம்பிக்கப்பட்ட ''பற்றிக் கோட்டா செமினரி'' என அழைக்கப்படும் வட்டுக்கோட்டை செமினரி ஈபுரு, கிரேக்கம் என்பவற்றுக்கிணையாகத் தமிழ்மொழியை முதன்முதலாக நவீன பல்கலைக்கழகத் தரத்திற்கு உயர்த்தியதோடமையாது, நவீன அறிவியற் தரத்திற் போதனையைத் தமிழ் மொழியில் முதன் முதலாக ஆரம்பித்த பெருமையினையும் பெற்று நிற்கின்றது. வட்டுக்கோட்டை செமினரியே, இன்றும் கல்வியுலகில் அருந்தொண்டாற்றிவரும் யாழ்ப்பாணக் கல்லூரியின் முன்னோடி என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மேனாட்டு விஞ்ஞானம், கணிதம், புவியியல், வான சாஸ்திரம், பௌதிகம் ஆகியன தமிழில் கற்பிக்கப்பட்டதோடு, இன்றைய விஞ்ஞானிகளுக்கே சவாலாக விளங்கும் 'உலகின் முதல் மனிதன் எவ்வாறு தோன்றியிருக்க முடியும்?' என்ற பிரச்சினையை அன்றே எம் தமிழ் மாணவர் மத்தியில் எழுப்பி அறிவியல், கிறிஸ்தவ, பராணக் கண்ணோட்டங்களில் அதனை அலசி ஆய வழிவகுத்தனர். அடிப்படை அறிவியற் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்கையில் கணித முறையும், செயல்

**சு. தேவானந்தர்**

முறையும், செயல்முறைப் பரிசோதனைகளின் பிரயோகமும் ஒருங்கே பயன்படுத்தப்பட்டமை வட்டுக்கோட்டை செமினரியில் எத்துணை சிறப்பான அறிவியற் கல்வி தமிழ் மொழியில் வழங்கப்பட்டதென்பதற்குச் சான்று பகர்கின்றது.

''பண்பட்ட மனிதனின் முதலாவது அறிவியல் தேவை பத்திரிகையே.' **(Newspaper is the First Intellcitual want of the Civi-lised Man)** என்ற டேனியல் புவர் அவர்களின் கூற்றுக்கமைய 1841 இல் அமெரிக்க மிஷனால் ஆரம்பிக்கப்பட்டு இன்று வரை தொடர்ந்து வெளிவரும் 'உதயதாரகை' பத்திரிகை மாணவருக்கு மட்டுமல்லாது பெரியோர்கள், தாய்மார் மற்றும் வாசிக்கும் பழக்கமுள்ள அனைவருக்கும் தமிழ் மொழிமூலம் அறிவியற் கருத்துக்களைப் புரியவைக்கும் சிறந்த சமூகப்பணியினை மேற்கொண்டது. 'உதய தாரகை' ஆரம்பித்த முதல் வருடத்திலேயே 'விலங்கியல்', 'நோய்கள்', 'வானசாஸ்திரம்' பற்றிய கட்டுரைகளோடு **'Book of Nature'** என்ற ஆங்கில அறிவியல் நூல் மொழிபெயர்க்கப்பட்டுத் தொடர்கட்டுரையாக வெளிவந்தமையும், அறிவியற் கலைச் சொற்களும் செமினரி மாணவரது அறிவியற் கட்டுரைகளும் **(Dissertations)** ஆங்கு இடம் பெற்றமையும் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

ஒரு குறுகிய வட்டமான பண்டிதர் குழாத்துள் மண்டியிருந்த கல்வியினையும் வாசிப்புப் பழக்கத்தினையும் அனைவருக்கும் திறந்து விட்டமைக்கு மிஷனரிமாரின் 'உதய தாரகை' போன்ற பத்திரிகைப் பணியும், வசனநடை இலக்கியத்தினைப் பிரபலப் படுத்தியமையும், பெண்கள் கல்வியினை அபிவிருத்தி செய்வதில் அவர்கள் மேற்கொண்ட முன்னோடி முயற்சிகளும் காரணங்களாய் அமைந்தன எனலாம்.

1833 இல் மிஷனரிமாரால் மானிப்பாயில் நிறுவப்பட்ட அச்சகமும், 1835 இல் நிறுவப்பட்ட 'யாழ்ப்பாணப் பாடநூல் சபை' (Jaffna School Book Society) யும் அவற்றின் இதர பணிகளோடு தமிழில் அறிவியற் கல்வியினைப் பிரபல்யப் படுத்துவதிலும், அறிவியற் பாடநூல் தேவையினைப் பூர்த்தி செய்வதிலும் உழைத்து வந்தன.

மிஷனரிமார் ஆற்றிய அறிவியற் பணிகள் அவர்களோடு மட்டும் நின்றுவிடவில்லை. தமக்குப் பின்னரும் தொண்டாற்றவல்ல, தமிழ் வளர்க்குந் தனயர்களைத் தோற்றுவிக்கும் பெரு விருப்பினால், வட்டுக்கோட்டை செமினரியின் மூலம் தமிழில் அறிவியல் தர வேண்டுமென்ற இதய உந்தலும், செயலூரமும் மிக்க மாணவர் பரம்பரையொன்றினையே தோற்றுவித்தனர்.

இத்தகு மாணவர் பரம்பரையில் தோன்றியவரே, சென்னைப் பல்கலைக்கழகத்தின் முதற் பட்டதாரிகளிலொருவரான டானியல் கரோல் விசுவநாதபிள்ளையாவர். அன்னார், பதிப்பாசிரியராகவிருந்து தமிழ்ப்பணி புரிந்த 'இராவ் பகதூர்' சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்களுக்கு செமினரியில் ஆசிரியராக விளங்கியவரென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. கரோல் விசுவநாதபிள்ளையவர்கள் தமிழ்மொழியில் வெளிவந்த முதலாவது அட்சரகணித நூலான ''வீசகணிதத்தினைப்' படைத்தளித்ததன்மூலம் அறிவியற்றமிழ் வரலாற்றில் தம் நாமத்தினைப் பொறித்துக் கொண்டனர். இந்நூலினை 'டே' ஆசிரியரின் ஆங்கில நூல்களையும், பாஸ்கராச்சாரியார் முதலியோர் ஆரிய மொழியிலே செய்த 'சித்தாந்த சிரோமணி' 'லீலாவதி', 'பிரமஸ்புட சித்தாந்தம்' முதலிய கணித நூல்களையும் ஆதாரமாகக் கொண்டியாத்ததோடு சாதாரண மக்கள் எளிதிலே புரிந்துகொள்ளும் வண்ணமும், கணிதத்திலே வெறுப்புற்றோர்கூட அக்கலையை விரும்பிக் கற்கும் வகையிலும் கதைரூபமாக வினாக்களை அமைத்தளித்தமை அந்நூலிலுள்ள தனிச் சிறப்பாகும். எடுத்துக்காட்டாக, வீசகணிதத்திலுள்ள ஒரு வினாவினைக் காண்போம்.

(நாளை தொடரும்)

## சமூக சீர்திருத்த கல்யாணம்

தமிழ்ச் சமுதாயத்தில் புரையோடிக் கிடக்கும் சாதிக் கொடுமை, சீதனக் கொடுமை போன்ற சமூக அநீதிகளுக்கெதிராக இதுவரை ஆங்காங்கு பல தியாகத் திருமணங்கள் நடந்துள்ளன. இவை இயற்கையான உள்ளப் பிணைப்பினால் உருவானாலும் போதியளவு விளம்பரத்தைப் பெறவுமில்லை. பெறமுயற்சிக்கவுமில்லை. ஆனால் சமுதாயத்தில் இவர்கள் உற்றார் பெற்றோர்களினால் ஒதுக்கப்பட்டுள்ளனர். ஆயினும் இவர்கட்குஆறுதல் கூற எவருமில்லை. இது மட்டுமல்ல அங்கக் குறைபாடுள்ள பலரை சமுதாயத்தில் சில தியாக உணர்வுடையோர் மணந்து இல்லறத்தைச் செவ்வனே நடத்துகின்றனர். இவ்வாறானதியாக உணர்வு நிறைந்ததும் சமூக அநீதிகளைக் களைந்தெறியக்கூடியதுமான பல திருமணங்கள் குடா நாடெங்கும் அங்கொன்று இங்கொன்றாக பல ஆண்டுகாலமாக நடந்துவருகின்றன.

இது இவ்வாறிருக்க ஆரம்பத்தில் இதயசுத்தியாக நல்ல நோக்குடன் ஆரம்பமான அறவழிப்போராட்டக்குழுவானது காலப்போக்கில் அதன் உறுப்பினர்கட்கு மலிவான விளம்பரத்தை தேடிக்கொடுக்கும் இயக்கமாக மாறிவருவது கவலைக்குரியது, குறிப்பிடத்தக்களவு புதுமையான அம்சங்கள் இல்லாத காதல் வசப்பட்ட திருமணங்கட்கு சமூகசீர்திருத்தமெனபுதுமெருகூட்டிக் கொள்ள முனைவதன் மூலம் சமுதாயத்தை இவர்கள் ஏமாற்றமுனைகிறார்களோவென்று கருதவேண்டியுள்ளது.

ஒருவரையொருவர் காதலிக்கின்றனர். காதலித்தவரை கைப்பிடிக்கின்றனர். இந்நிகழ்ச்சிகள் பலநடந்தாலும், அறவழிக்குழுஉறுப்பினர்களிடையே இந்நிகழ்ச்சி நடைபெறும்போதுதானா சமூகசீர்திருத்தமென இக்குழுவும் குழுவுறுப்பினர்களும் தம்மை விளம்பரப்படுத்தும் நோக்கமாக குழுசெயற்பாடுகளை அமைத்துக் கொள்ளாது. தூய உள்ளத்தோடும் தியாகஉணர்வோடும் செயற்படவேண்டுமெனவே பொதுநலவிரும்பிகள் அனைவரும் விரும்புகின்றனர்.

'கவிதரன்'
கல்லடி, கரவையூர்.

## மக்கள் கருத்து

## மீண்டும் இயங்கும்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை நடேஸ்வரக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் மீண்டும் புத்துயிர் பெற இருக்கிறது.

இச்சங்கத்தை புனரமைத்து கல்லூரியின வளர்ச்சியில் பழைய மாணவர்கள் அதிக ஆர்வமும் ஈடுபாடும் கொண்டு உழைப்பதற்கு வழிவகுக்கும் விதத்தில் கல்லூரியின் அதிபர் திரு. இ. க. குலசேகரன் ஏற்பாடுகள் மேற்கொண்டுள்ளார்.

இம்மாதம் 21ம் திகதி இப் பழையமாணவர் சங்க அங்குராற்பணக் கூட்டம் நடைபெற உள்ளது. நீண்டகாலமாக இச் சங்கம் இயங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது,

# எடின்பரோ கோமகன் மீண்டும் இங்கு வருகிறார்

## யானைகளைத் துரத்துவதைப் பார்வையிடுவார்

(கொழும்பு)

எலிசபெத் மகாராணியாரது கணவர் எடின்பரோ கோமகன் மார்ச் மாதம் 2ம் திகதி நான்குநாள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வருகிறார்.

உலக வனவிலங்கு நிதியத் தலைவர் என்றமுறையில் இங்கு வரும் இளவரசர் எடின்பரோ, யால, வில்பத்து போன்ற இலங்கையின் பிரதான வனவிலங்குத் தேசிய பூங்காக்களும் விஜயம்செய்து வனவிலங்குத்துறைசார்ந்த நிபுணர்களையும் சந்திக்கவுள்ளார்.

இளவரசர் எடின்பரோ சிறந்த விமானமோட்டியாவா. இம்முறை தாம் வரும் விமானத்தைத் தாமே செலுத்தி வருவாரென்றும், வீரவில விமானத்தளத்தில் இவ் விமானம் இறக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வீரவில விமானத்தளத்தில் வந்திறங்கும் இளவரசரை, ராஜாங்க அமைச்சர் ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ்ஸும் இலங்கை வனவிலங்குப் பாதுகாப்பு இயக்குனரும் வரவேற்பார்கள்.

மகாவலி 'எச்' பிரிவிலுள்ள காடுகளிலிருக்கும் யானைகளை வில்பத்து பூங்காவிற்குள் விரட்டுவதனையும் எடின்பரோ கோமகன் பார்வையிடவுள்ளார்.

மகாவலி 'எச்' பிரிவுக் காடுகள் துப்பரவுசெய்யப்படவிருப்பதனால் இப்பகுதியில் உள்ள யானைகளை அருகில் உள்ள வில்பத்து காடுகளுக்குள் துரத்தவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இவ் யானைத் துரத்தலை எடின்பரோ கோமகனின் விஜயத்தை ஒட்டிய முக்கியநிகழ்ச்சியாக மகாவலி அபிவிருத்திச் சபையினரும், வனவிலங்குத் திணைக்களத்தினரும் ஒழுங்கு செய்துள்ளனர்.

ஜனாதிபதி ஜயவர்த்தனா எடின்பரோ கோமகனுக்கு இராப்போசன விருந்தொன்றையளித்தும் கௌரவிப்பார். (கி)

# பிரதிவாதியின் பார்வையில்

## மயங்கிவிழுந்த விண்ணப்பதாரி!

### ஜீவனாம்ச வழக்கில் சம்பவம்

(புலோலி)

பருத்தித்துறை நீதிமன்றத்தில் நடைபெற்ற ஜீவனாம்சவழக்கொன்றில் பிரதிவாதி விண்ணப்பதாரியை உற்றுநோக்கியபோது விண்ணப்பதாரி மயங்கி விழ வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

அல்வாயைச்சேர்ந்த குலமதி என்னும் பெண் அதே ஊரைச்சேர்ந்த தேவராசா என்பவர் மீது ஜீவனாம்சம் கோரி வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இவ்வழக்கு விசாரணை பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையில் விண்ணப்பதாரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். நவரத்தினம் பிரதிவாதி ஒரு மாந்திரீகரென்றும், அவர் வாய்க்குள் ஏதோ முணுமுணுப்பதாகவும் சுட்டிக்காட்டி அவர் கையில் வைத்திருந்த சிறு பொதியை ஆராயுமாறும் வேண்டிக்கொண்டார்.

மன்றின் உத்தரவின் பேரில் நீதிமன்றப் பொலிஸ் உத்தியோகத்தர் பிரதிவாதியிடமிருந்த சிறுபொதியைப் பரிசீலனை செய்தபோது அதற்குள் புரியாத வார்த்தைகளால் எழுதப்பட்ட தகடுஒன்று இருக்கக்காணப்பட்டது. நீதவான் அத்தகட்டை நீதிமன்றத்திற்கு வந்திருந்த பிரதிவாதியின் தகப்பனாரிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டதைத் தொடர்ந்து பிரதிவாதி அதைத் தகப்பனாரிடம் ஒப்படைத்தார்.

பின்னர் பிரதிவாதி விண்ணப்பதாரியைஒரேபார்வையாக உற்றுநோக்கிக் கொண்டு நின்றார். விண்ணப்பதாரி மயக்கமடைந்து விழுந்தார். இதனைத் தொடர்ந்து வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

விண்ணப்பதாரி சார்பில் சட்டத்தரணி ஏ.என்.இராமச் சந்திரனின் அனுசரணையுடன் சட்டத்தரணி ஆர். நவரத்தினமும், பிரதிவாதி சார்பில்சட்டத்தரணி என். கிருஷ்ணராசாவின் அனுசரணையுடன் சட்டத்தரணி ஆர். ஸ்ரீசிவாயாவும் ஆஜராகி இருந்தனர்.

# கூட்டணி கிளைகள் புனரமைப்பு

(புலோலி)

வடமராட்சி வடக்கு கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளைகள் யாவும் புனரமைப்புச்செய்யப்படவுள்ளன.

இப்பகுதித் தமிழர் விடுதலைக் கூட்டணியின் துரிதநடவடிக்கைகளுக்கிணங்க தொண்டமானாறு தொடக்கம் நாகர் கோவில்வரையிலுமுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணிக்கிளைகள் யாவும் அடுத்த மாத முற்பகுதியில் புனரமைப்புச்செய்யப்படவுள்ளதாக பருத்தித்துறைத் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணி மத்திய குழு உறுப்பினரொருவர் தெரிவித்தார்.

"நாங்கள் ஆட்சிக்கு வந்தால்

# மக்களின் உணவு, உடைகளுக்கு சகல நிதிகளையும் செலவிடுவோம்"

## வெளிநாட்டு மோசடிக் காரரை வெளியேற்றுவோம்!

### பொறளையில் ரோகண விஜயவீரா

(கொழும்பு)

''உத்தேசவெள்ளைஅறிக்கை அமுலாவதனால் அழிக்கப்படவிருக்கும் இலவச கல்வித்திட்டத்தை நாங்கள் ஆட்சிக்கு வந்ததும் மீண்டும் அமுலுக்கு கொண்டுவருவோம். அத்துடன் இந்நாட்டிலுள்ள சகல அந்நியர் ஆதிக்கத்தையும் முறியடிப்போம். மக்களின் உணவுக்கும், உடைக்குமே சகல நிதியையும் செலவிடுவோம்.''

பொறளையில் வெள்ளை அறிக்கையை எதிர்த்து நடந்த கூட்டத்தில் மக்கள் விடுதலை முன்னணி தலைவர் திரு ரோகண விஜயவீரா மேற்கண்டவாறு கூறினார். திரு. விஜயவீரா மேலும் கூறியதாவது:

''இந்த நாடு வெளிநாடு மோசடிகாரருக்கு அடகு வைக்கப்பட்டுள்ளபோதும், நாங்கள் பதவிக்கு வந்ததும் நாட்டை விடுவிப்போம்.

'மக்கள் விடுதலை முன்னணி பலமற்ற இயக்கமல்ல, மக்களை எதிர்நோக்கும் எந்தச் சவாலையும் ஏற்றுக்கொள்ளக்கூடியவர்கள் எம்மத்தியில் இருக்கின்றார்கள். எங்களைப்பற்றி அரசு கூறிவரும் கருத்துக்கள் பற்றி நாங்கள் அக்கறைப்படவில்லை.

''இந்த அரசு பதவிக்குவந்த நாள்முதல், மக்களின் சுதந்திரத்தை ஒவ்வொன்றாக பறிப்பதில் கவனம் செலுத்திவருகிறது.

' சகல மான்யங்களும் நிறுத்தப்பட்டுவிட்டது. தற்போது எஞ்சியிருப்பது இலவச கல்வியும், சுகாதாரசேவையும்தான் இவற்றிலும், அரசு கைவைக்கப்போவதாக அஞ்சப்படுகிறது.

யூ. என். பி. அரசை முறியடித்து புதிய உலகம் ஒன்றை உருவாக்க, சகல மக்களும் ஒன்றுதிரண்டு மக்கள் விடுதலை முன்னணியை ஒரு பலம் வாய்ந்த சக்தியாக உருவாக்க வேண்டும்.

''ஜனாதிபதி ஜெயவர்த்தனா, நாடு முழுவதும் பவனிவந்து மக்கள் விடுதலை முன்னணி ஜனநாயகத்திற்குஒரு அச்சுறுத்தலாகும்'' என்று கூறிவருகிறார், ஆனால் யூ. என். பியின் இப்படியான பிரச்சாரத்தையிட்டு தாம் கவலைகொள்ளவில்லை.

''சுதந்திரக்கட்சி ஆட்சி காலத்தில், எதிர்க்கட்சியிலிருந்த திரு. ஜெயவர்த்தனா நாடுமுழுவதும் சென்று முன்னாள் அரசின் ஆட்சிபற்றி குறை கூறிவந்தார். ஆனால் மாணவர்களின் இலவச கல்விக்கு அச்சுறுத்தல் ஏற்படும்போது எதற்காக வேறு விதமாக அவர் நடந்து கொள்கிறார்?

''மக்கள் விடுதலை முன்னணியினர் மறியல் செய்தால் அதனை அரசு பயங்கரவாதம் என அடையாளமிடுகிறது. அப்படியானால் முன்பு அவர்கள் செய்த மறியல் இயக்கங்கள் பயங்கரவாதமில்லையா?

''மக்கள் விடுதலை முன்னணியை ஒரு ஜனநாயகத்திற்கு மாறான கட்சியென கூறுகிறார்கள். மக்களை துன்புறுத்துமாறு பொலிஸ் உத்தியோகத்தர்களை அரசு தூண்டுகிறது இப்படியான செயல்களுக்கு நாங்கள் அப்பாவி பொலிசார்களை குறைகூற முடியுமா?

''வெள்ளை அறிக்கைக்கு எதிராக நடந்த ஆர்ப்பாட்டத்தின்போது இடம்பெற்ற வன்செயலுக்கும், எங்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று கூறுகிறேன். மக்கள் விடுதலை முன்னணி எந்த அரசியல் கட்சியுடனும் இணைந்திருக்கவில்லை. சுதந்திரக் கட்சிக்களுக்குள் உள்ள பிரச்னை அவர்களாலே தீர்க்கப்பட வேண்டியது.

''நாங்கள் சுதந்திரக்கட்சியுடன்வைத்திருந்த சகலதொடர்புகளையும் துண்டித்துவிட்டோம்.

''சிலர் கூறுவதுபோல் நான் ஜனாதிபதி ஜயவர்த்தனாவின் வாலல்ல, ஆனால் எங்கும் அவரைப் பின்தொடருவது அவரை கடிப்பதற்குத்தான்.

''நாங்கள் காரில் பயணம் செய்வதாக ஜனாதிபதி குறை கூறுகிறார். அமைச்சர்கள், உத்தியோகபூர்வமான வாகனங்களில் பயணம் செய்கின்றார்கள். ஆனால் நாங்கள் எங்கள் கட்சியின் சொந்தக் கார்களில் பயணம் செய்கிறோம்'' (க)

# ரயிலைக் கவிழ்க்க முயற்சி நடந்ததா?

(மாவிட்டபுரம்)

ஓடிக்கொண்டிருந்த புகையிரதத்தின் முன்பாக இரும்புத்துண்டு வைக்கப்பட்ட சம்பவம் ஒன்று தெல்லிப்பழையில் நடந்துள்ளது.

கடந்த புதன்கிழமை மாலை தபால் மெயில் புகையிரதம் காங்கேசன்துறையிலிருந்து புறப்பட்டுச் சென்றபோது தெல்லிப்பழை புகையிரத நிலையத்திற்கருகாமையில் புகையிரதத்தின்முன் ரயில் பாதையில் இரும்புத்துண்டு ஒன்று வைக்கப்பட்டிருந்ததாம். புகையிரத என்ஜின் அதில் ஏறியபோதும் தெய்வாதீனமாகப் பாதையைவிட்டு விலகவில்லையென்றும் அந்த இரும்புத் துண்டு அகற்றப்பட்ட பின்னரேபுகையிரதம் தொடர்ந்து சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதுபற்றி காங்கேசன்துறை புகையிரதநிலையத்திலிருந்து காங்கேசன்துறை பொலிசாருக்கு தகவல் அறிவிக்கப்பட்டது. இது விஷமிகளின் செயலா? என்பது குறித்து பொலிசார் விசாரணைசெய்து வருகின்றனர்.

# அங்கீகாரம் கோரி 18 கட்சிகள் விண்ணப்பம்

(கொழும்பு)

பதினெட்டு அரசியல் கட்சிகளும், ஏனைய அரசியல் இயக்கங்களும் தம்மை அங்கிகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளாகப் பதிவு செய்யும்படி தேர்தல் ஆணையாளருக்கு விண்ணப்பித்துள்ளன.

பாராளுமன்ற தேர்தல் நடவடிக்கையின் கீழ் தம்மைப் பதிவுசெய்யும்படி கோரியுள்ள மேற்படி கட்சிகள், தமது விண்ணப்பங்களை கடந்த திங்கட்கிழமை தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பிவைத்தன.

அரசியல் அங்கீகாரத்துக்கு விண்ணப்பித்திருக்கும் கட்சிகளில் முன்னாள் பாணந்துறை எம்.பி. டாக்டர் நெவில் பெர்னாண்டோவினால் ஆரம்பிக்கப்பட்ட 'லங்கா ஜாதிக பெரமுன, முன்னாள் ஹபரதுவ எம். பி திரு. பிரின்ஸ்குணசேகராவின் தலைமையிலான ஸ்ரீலங்கா விமுக்தி பாலவேகய, மக்கள் விடுதலை முன்னணி ஆகியனவும் அடங்குகின்றன.

அங்கிகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு, வானொலி, தொலைக்காட்சியில் பிரசாரம் செய்யும் சலுகை, கட்டுப்பணம் இன்றிப் போட்டியிடும் உரிமை, ஒரு வாக்காளருக்கு 50 சதப்படி அரசாங்கத்திடமிருந்து பணம்பெறும் சலுகை போன்றன வழங்கப்பட்டிருக்கின்றன.

விண்ணப்பித்திருக்கும் கட்சிகள் மீதான விசாரணைகள்முடிவடைந்தபின்னர், தேர்தல் ஆணையாளர் மேற்படி, கட்சிகளுக்குஅங்கீகாரத்தை வழங்குவது பற்றியும் மறுப்பது பற்றியும் தீர்மானிப்பார் எனத் தெரிவிக்கப்பட்டது. (கி)

முன்னாள் ஜனாதிபதி நிக்ஸனின்

# அந்தரங்கப் பேச்சுக்களை பொதுமக்களும் கேட்பர்

வாசிங்டன் பெப். 12

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி திரு. ரிச்சார்ட் நிக்ஸன் வெள்ளை மாளிகையில் இருந்தபோது நிகழ்த்திய அந்தரங்கப் பேச்சுவார்த்தைகளைப் பதிவு செய்த ஒலிப்பதிவு நாடாக்களை, 1984ம் ஆண்டு ஆரம்பத்தில் பொதுமக்களும் பெறக்கூடியதாகஇருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்தரங்கப் பேச்சுவார்த்தைகளது ஒலிப்பதிவுகள் பொதுமக்கள் மத்தியில் வெளியாகவிருப்பதை ஆட்சேபித்து மேன்முறையீட்டு நீதிமன்றமொன்றில் திரு. நிக்ஸன் வழக்குத் தாக்கல் செய்திருந்தபோதிலும், மேற்படி நீதிமன்றம் இத்தகைய வெளியீட்டால் நிக்ஸனது தனிப்பட்ட கௌரவம், சாதாரண குடிமகன்என்றரீதியிலோ. அல்லது முன்னாள் ஜனாதிபதியென்றரீதியிலோ பாதிக்கப்படமாட்டாதெனத் தீர்ப்பளித்து ஆட்சேபமனுவை நிராகரித்தது.

திரு. நிக்ஸன் சம்பந்தப்பட்ட வாட்டர்கேட் ஊழல் பற்றிய ஒலிப்பதிவு நாடாக்கள் 1980ம் ஆண்டு மேமாதம் பொதுமக்களும் பெறக்கூடிய வகையில் வெளியாகியிருந்தனவென்பதும் குறிப்பிடத்தக்கது. (கி)

# தலைமன்னார் - ராமேஸ்வரம் கப்பல் சேவை அதிகரிப்பு

(மன்னார்)

தலைமன்னார் துறைமுகத்தில் இருந்து கப்பல்மார்க்கமாக இந்தியாவுக்குச் செல்லும் பிரயாணிகளின் தொகை அதிகரித்ததையடுத்து கடந்த வாரம் தலைமன்னார் துறைமுகத்திலிருந்து ராமேஸ்வரத்திற்கு ஒரு விசேட கப்பல் சேவை நடத்தப்பட்டது.

விசேட கப்பல்சேவை நடத்தப்பட்டும் கடந்த சிலதினங்களாகத் தலைமன்னார் துறைமுகத்தில் கப்பலில் இடம் கிடைக்காத பிரயாணிகள் அடுத்த கப்பலை எதிர்பார்த்திருக்கின்றனர்.

## வானொலியில் நாளை

சமூகத்தொடர்புத்துறையில் அமெரிக்காவில் உயர் கல்வியின்று அண்மையில் நாடு திரும்பிய அருள்திரு சா. ம. செல்வரத்தினம் (கரவையூர்ச் செல்வம்) அளித்த பேட்டி, இலங்கை வானொலியில் நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு ஏழு மணிக்கு ஒலிபரப்பாகும் 'புதிய உலகம்' நிகழ்ச்சியில் இடம்பெறுகின்றது.

# கல்விவெள்ளை அறிக்கைதேசிய அபிலாஷைகளை நிராகரிக்கிறது; வாபஸ் பெறுக"

## இலங்கை தேசபக்த வாலிபர் இயக்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கல்வி வெள்ளை அறிக்கையின் நோக்கம் கல்வி பெறும் உரிமையில் ஏற்றத்தாழ்வை முழுமைபெறச் செய்துவிட வேண்டும் என்பதுதான். இது நாட்டின் 90 வீதத்திற்கு மேற்பட்டோரைப் பாதித்து மிகச்சிறு தொகையினரைப் பாதுகாக்கும் செயல் என்பதாலும், வெள்ளை அறிக்கை தேசிய அபிலாசைகளை நிராகரிப்பதனுலும், அரசு கல்வி வெள்ளை அறிக்கையை உடன் வாபஸ்பெறவேண்டும்.

இவ்வாறு இலங்கை தேசபக்த வாலிபர் இயக்கம் அரசாங்கத்தை வலியுறுத்திக் கேட்டுள்ளது. இந்த வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:—

தாய்மொழிக் கல்வியைக் குழிதோண்டிப் புதைத்து ஆங்கிலத்தைக் கட்டாய பாடமாக்குவதுங்கூட, உயர்வசதி படைத்தோர் மட்டும் உயர் கல்வி பெற வகை செய்வதுடன் அவர்கள் மேலைத்தேசங்களில் சென்றும் மேற்படிப்பைத் தொடர வாய்ப்பளிக்க வேண்டும் என்ற எண்ணமே காரணம் என்பது வெளிப்படை.

'உயர் குடிப்' பிள்ளைகள் விசேடமுறையில் கல்விபெறக் கூடியதாக 'ஒற்றை நிலைப் பாடசாலைகள்' ஒதுக்கிக் கொடுக்கப்படுகின்றது. இது அரசாங்கச் செலவில் ஆசிரியர்கள், ஊழியர்களைப் பெற்றிருக்கும் ஒருவகை தனியார் பாடசாலையாகும். இங்கு கல்வி கற்போர் மட்டுமே உயர்கல்வியைப் பெறக்கூடியதாக இருக்கும். இதன்மூலம் உயர் கல்வியைத் திறமையுடைய அனைவரும் பெறும் சந்தர்ப்பத்தை வெள்ளை அறிக்கை மறுத்து சிறு தொகையினரான உயர் வர்க்கத்தினருக்கு மட்டுமே அது உரிமையுடையதாக மட்டுப்படுத்தப்படுகின்றது.

### கொத்தணிமுறை

அதேவேளை 'கொத்தணி முறை' மூலமாகக் கிராமப்புறப் பாடசாலைகளை முன்னேற்றும் பொறுப்புத் தட்டிக் கழிக்கப்படுகின்றது. பின்தங்கிய பாடசாலைகள் வெறுமனே அண்டிப்பிழைக்கவிடப்படுகின்றன. இதனால் கிராமப்புற மாணவர்களின் கல்விவிருத்தி புறக்கணிக்கப்படுகின்றது; திட்டமிட்டே அழிக்கப்படுகிறது. இவ்வாறு பாதிக்கப்படுகின்ற பெருந்தொகையான சாதாரண மாணவர்கள் 'தொழிற்கல்வியில்' வேண்டிய அளவில் தேர்ச்சிபெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது, இவர்கள் நிலப்பிரபுத்துவ சாதியமைப்பின் வரம்புக்குள் நின்று தத்தமது குலத்தொழிலைக் கற்கட்டும் என்பதையே ''தொழில் மகத்துவப் போதனை'' மறைமுகமாக எடுத்துக்காட்டுகின்றது. இது குலமுறைக் கல்வியைத் திணிக்க எடுக்கப்படும் கபடத்தனமான முயற்சியாகும்.

யூ. என். பி. அரசு ஏற்கனவே தனியார் மருத்துவக் கல்லூரி பொறியியல் நுட்பக் கல்லூரி ஆகியன உருவாக வகை செய்ததன்மூலம் அரசாங்கக் கல்வியமைப்பைத் துடைத்தழித்துத் தனியார் துறைக் கல்வியை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதனுலும், கல்வி வெள்ளை அறிக்கை அரசாங்கக் கல்விக்கு உத்தரவாதம் வழங்காமையினுலும் வெகுஜனங்களின் சந்தேகங்கள் நியாயமானவை என ஊர்ஜிதம் செய்யப்படுகின்றன.

எமது தாயகத்தைப் பல் தேசியக் கம்பனிகளுக்குத் தாரைவார்த்து, சுதந்திர வர்த்தக வலயத்தில் நவகாலனித்துவத்துக்குப் புத்துயிரூட்டி கட்டுப்பாடற்ற இறக்குமதிக்கும் அனுமதித்த இலங்கையை முழுமையாக ஏகாதிபத்திய சுரண்டலுக்கு ஆட்படுத்யுள்ள பொருளாதாரக் கொள்கைக்கு அமைவான கல்வியமைப்பை உருவாக்கும் எண்ணத்துடனேயே கல்வி வெள்ளை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இது சுதந்திர— தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப உதவாத புத்திஜீவிகளையே உருவாக்கும். இதனுல் தேசிய அபிலாஷைகள் நிராகரிக்கப்படுகின்றது.

தேசிய அபிலாஷைகளை நிராகரிப்பதோடு சிறுபான்மையின மக்களைப் பாதிக்கும் பல அம்சங்களும் வெள்ளை அறிக்கையில் காணப்படுகின்றது. தாய் மொழிக்கல்வி குழிதோண்டிப் புதைக்கப்படுவதனுலும், ''கொத்தணிமுறை'' அறிமுகப்படுத்தப்படுவதனுலும் சிறுபான்மையின மக்கள் அதிருப்திக்குள்ளாவதைத் தேவையற்ற சந்தேகம் என்று தட்டிக்கழித்துவிட முடியாது. எனவே கடந்தகாலங்களில் பலதரப்பட்ட போராட்டங்களின் வாயிலாக மக்கள் வென்றெடுத்த ஓரளவாவது சமநிலைப்படுத்திய ஒன்றிணைந்த தேசிய அரசாங்கக் கல்வியைப் பாதுகாத்து மேலும் செழுமைப்படுத்தும் பணியை முன்னெடுக்க கல்விமான்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப்பலதரப்பட்டோரும் ஒன்றிணைந்த குரலில் முன்வர வேண்டுமென எமது இலங்கை தேச பக்த வாலிபர் இயக்கம் வேண்டிக் கொள்கிறது.

## ''கலைஞர்களுக்கு பேரிழப்பு''

(மாவிட்டபுரம்)

''கலைத்துறையில் மிகுந்த ஆர்வம் கொண்டு அவற்றை வளர்க்கவும், அவற்றைப் பேணும் கலைஞர்களை பலதுறைகளிலும் முன்னேற்றவும் மிகவும் ஈடுபாடு கொண்டுழைத்த அமரர் ஸ்ரீகாந்தாவின் மறைவு ஈழத்துக் கலைஞர்களுக்குப் பெரும் இழப்பாகும்.''

இவ்வாறு இலங்கை இசை வேளாளர் சங்கம் அமரர் ஸ்ரீகாந்தாவின் மறைவையொட்டி அன்னுரின் குடும்பத்திற்கு அனுப்பியுள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளது.

சங்கச்செயலாளர் திரு. எஸ். ஆர். ஞானசுந்தரத்தினுல் அனுப்பப்பட்டுள்ள இச்செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இசைக் கலை வளர வேண்டுமானுல் இசைக்கலைஞர்கள் பேணப்பட வேண்டுமென்ற கருத்தைக் கொண்டிருந்தது மட்டுமன்றி அதற்காக உழைத்தவர் அமரர் ஸ்ரீகாந்தா. இலங்கை இசை வேளாளர் சமூக முன்னேற்றத்திற்காக அரசாங்க அதிபராக இருந்த காலம் தொடக்கம்இறுதிவரை உழைத்த பெரியார் அவர்.

பிரபல நாதசுர, தவில் கலைஞர்களை வெளிநாடு சென்று நமது நாட்டிற்கு பெருமை தேட வழி வகுத்துக்கொடுத்தவரும் அவரே.

1957 ல் யாழ்ம்பாணத்தில் கலை, கைப்பணி விழாவொன்றை பெரிய அளவில் நடத்தி கலைத்துறையில் ஓர் மறுமலர்ச்சியை தோற்றுவித்த அவரை கலை உலகம் மட்டுமல்ல இசை வேளாளப் பெருங்குடி மக்களும் ஒருபோதும் மறக்கமாட்டாக்கள். அவர் சேவை என்றும் எமது மனதில் நிலைத்து நிற்கும்.

சர்வதேச புகழ்வாய்ந்த எம். ஜினதாசா கம்பனியினரால் உற்பத்திசெய்யப்பட்டு, இலங்கை மக்களால் பெருமளவில் பாவிக்கப்படும்

சென்றிக் நீரிறைக்கும் மோட்டர்கள்

**புதிய அறிமுக விலைக்குறைப்புடன்**

எம்மிடம் விற்பனைக்கு வந்துவிட்டன

பெருமளவில் பணத்தை மீதப்படுத்துவதற்கு,
யாழ்ப்பாண மக்கள் அதிகம் வாங்குவது
சென்றிக் நீரிறைக்கும் மோட்டர்கள்.
சர்வதேச தரத்திற்கு இணைந்ததென தரக்கட்டுப்பாட்டுச்சபையால்
உறுதிப்படுத்தப்பட்டது சென்றிக் நீரிறைக்கும் மோட்டர்கள்

| | | |
|---|---|---|
| 1''×1'' | (புட்வால்வ் மெயின் சுவிச் உட்பட) வீட்டுப் பாவனைக்கு உகந்தது | ரூபா 2100—00 |
| 1 1/2''×1 1/4'' | (புட்வால்வ்வுடன் 3/4 HP | ரூபா 3400—00 |
| 2''×2'' | 1 HP விவசாய பாவனைக்கு | ரூபா 4200—00 |
| 2''×2'' | மணித்தியாலத்துக்கு தொடர்ச்சியாக 5000 கலன் இறைப்பது 3 HP | ரூபா 4950—00 |

ஒரு வருட காலம் எமது உத்தரவாதத்துடன் விற்பனைசெய்கின்றோம்.

எம்மிடம், வீட்டுப் பாவனைக்கும், கடைகளுக்கும் தேவையான
மின்சாரத்தை உற்பத்திசெய்யும் ஜெனரேட்டர்கள்

றெபின் நீரிறைக்கும் யந்திரங்கள் குறைந்த விலையில்
விற்பனை செய்யப்படுகின்றன.

மின்சார உபகரணங்கள், மின்னியல் பொருட்கள், மின்சார
வீட்டுப்பாவனைப் பொருட்கள், சகலவித வைபவங்களிலும்

அன்பளிப்புச்செய்ய உகந்த மின்சார ஸ்திரிகைப்பெட்டி, எலெக்றிக் கேற்றில்,
எலெக்றிக் ஹொட்பிளேட், குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

நகரில் நீண்டகால வியாபாரிகள்;

**நியுரோன் எலெக்றிக்கல்ஸ்**

141--143, ஸ்ரான்லி வீதி -- யாழ்ப்பாணம்.
போன்: 7016

## 5ஆயிரம் ஆசிரியர் நியமனம்: இன்று போட்டிப் பரீட்சை

### யாழ். மாவட்டத்தில் 4,250 பேர் தோற்றுவர்

(கொழும்பு)

5 ஆயிரம் ஆசிரியர்களை நியமிப்பதற்கான போட்டிப் பரீட்சை இன்று நாடுமுழுவதிலும் உள்ள 244 பரீட்சை நிலையங்களில் நடைபெறுகிறது.

யாழ். மாவட்டத்தில் மட்டும் 2 பரீட்சை நிலையங்களில் சுமார் 4,250 பேர் இப்பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த 37ஆயிரம் பேர் 5 ஆயிரம் வெற்றிடங்களுக்காக இப்போட்டிப் பரீட்சையில் தோற்றுகின்றனர்.

1,100தமிழ் ஆசிரியர்முஸ்லிம்களுக்கானவெற்றிடங்களுக்கு9 ஆயிரம் பேர் நாடு முழுவதிலும் இப்பரீட்சையில் தோற்றுகின்றனர். காலை 9.30 மணி முதல் 12 மணிவரை நடைபெறும் இப்பரீட்சையில் பொது அறிவு, பொது உளச்சார்பு ஆகிய இரு பாடங்களும் இடம்பெறும். ஆங்கில ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தவர்கள் ஆங்கில பாடத்து'—ன் பொது அறிவுப்பாடத்திற்கும் தோற்றவேண்டும்.

இப்பரீட்சையில் சித்தி அடைவோருக்கு நேர்முகப் பரீட்சையின்பின் 2ம் தவணைக்குமுன் நியமனம் வழங்குவதென்று கல்விச்சேவை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இதே சமயம் பட்டதாரி ஆசிரியர்களுக்கான நியமனம் இம்மாத இறுதியில் வழங்கப்படுகிறது. (இ)

## ''மக்கள் விழிப்படைய சனசமூகநிலையங்கள் தேவை

(மாவிட்டபுரம்)

''கிராமங்களில் சனசமூக நிலையங்கள் மிகவும் அவசியமானவை. கிராமமக்களை பல துறைகளிலும் விழிப்புணர்ச்சியடையச் செய்ய இவை பெரிதும் சேவையாற்ற முடியும். ஆகவே கிராமங்கள் தோறும் சனசமூக நிலையங்களை அமைப்பதில் கிராம மக்கள் கவனம் செலுத்தவேண்டும்.''

இவ்வாறு மாவிட்டபுரம் காந்தி சனசமூக நிலையத்தை மங்களவிளக்கேற்றி அங்குரார்ப்பணம் செய்துவைத்துப் பேசுகையில், யாழ். அபிவிருத்திச் சபைத்தலைவர் திரு. சு. நடராசா கூறினுர்.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராஜா தலைமையில் நடந்த இவ்வைபவத்தில் தொழிலதிபர் திரு. க. கனகராஜா கலந்துகொண்டு காந்தியின் உருவப் படத்தைத் திறந்துவைத்தார். அபிவிருத்திச்சபை உறுப்பினர் திரு. ந. இராசேந்திரமும் இதில் கலந்து பேசினுர்.

# 'இந்துசமயவாழ்க்கை உலக ரீதியில் மேம்பட வேண்டும்

## விஸ்வ ஹிந்து பரிஷத் நோக்கம் அதுதான்''

(புலோலி)

''இந்துக்கள் தமது சமய வாழ்க்கையை உலக ரீதியில் மேம்பாடு அடையச்செய்ய வேண்டும். இதனுலேயே இந்து சமயிகளுக்கெனப் பலம்வாய்ந்த அமைப்பு ஒன்று. இருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது''

இவ்வாறு முன்னுள் யாழ். அரசாங்க அதிபரும், விஸ்வ ஹிந்து பரிஷத் அகில இலங்கைக்கிளைத்தலைவருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி தெரிவித்தார்.' கோப்பாய்ப் பிரதேச விஸ்வஹிந்து பரிஷத் கிளையை அங்குரார்ப்பணம் செய்துவைத்துப் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினர். இவ்வங்குரார்ப்பண வைபவம்நீர்வேலி, வலிகிழக்கு தென்பகுதிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் திரு. எஸ். குமாரசுவாமி தலைமையில் நடைபெற்றது.

திரு. யோகேந்திரா துரை சுவாமி தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

'இந்து மகாசபை மூலம் சகல சமூக மக்களினதும் முன்னேற்றத்திற்காகச் சேவை யாற்றவேண்டும். இந்துக்கள் அனைவரும் ஒன்றுபட்டு இயங்க வேண்டும். அப்போதே இந்து மதத்தின் பெருமையை நிலைநிறுத்தமுடியும்.

'இந்து மக்களில் பலருக்கு இந்து கலாசாரம், பண்பாடு ஆகியனவற்றைப் பற்றி ஒன்றுமே தெரியாத நிலையில் இருக்கின்றனர். இத்தகையவர்களுக்கு இந்துக் கலாசாரத்தை உணர்த்தி இந்துசமய எழுச்சியை ஏற்படுத்தவேண்டும்''

பருத்தித்துறை நீதவான் திரு. கே. எஸ். மகேசன் சிறப்புரையாற்றுகையில் கூறியதாவது;

''உலக நாடுகள் பலவற்றிலும் இந்து சமயிகள் வாழ்ந்து வருகின்றனர். உலக நாடுகளில் வாழும் இந்து மக்கள் அனைவரையும் ஒன்றிணைத்து இந்து சமய ஒற்றுமையைக் கட்டிஎழுப்பவேண்டும் தமிழ்க் கலாசாரமும், இந்துக் கலாசாரமும் ஒன்றேடொன்று இரண்டறக் கலந்து இருக்கின்றன.

''சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்தபடியினுலேயே தமிழும் சைவமும் வளரக்கூடியதாக இருந்தது இல்லையெனில் ஆரியம்போல் தமிழ்மொழியும் அழிந்துபோய் இருக்கும். தமிழில் காணப்படும் சிறப்புக்குக் காரணம் இந்துக் கலாசாரம் தான். சைவமே தமிழுக்கு மெருகூட்டுகின்றது. தமிழ்க் கலாசாரத்தின் மேன்மை நிலைகள் முழுவதும் சைவத்திலேயே உள்ளன.''

''சர்வதேச ரீதியில் உலக இந்துக்களை ஒன்றிணைக்க உலக இந்துமகாசபை வழிவகுக்கின்றது. இந்து கலாசாரம் என்பது ஒரு பெரிய சக்தி. தமிழைக் கட்டி எழுப்பி இந்து கலாசாரம் எழுப்பும் உலகில் உள்ள பல்வேறு மொழிபேசும் இந்துக்களுடன் நாம் இணைய வேண்டும்.

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. கிட்ணர் பேசும் பொழுது குறிப்பிட்டதாவது:

''அன்பு, கருணை, தாராள மனப்பான்மை ஆகியவற்றைக் கொண்ட புராதனப் பழைமை வாய்ந்தது எமது சமயம். பசுவதை செய்யப்படுவதைத் தடை செய்வதற்கான நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ளவேண்டும். அங்கவீனர்களுக்குப் புனர்வாழ்வு அளித்தல். சீதனப் பிரச்சினைகளை நீக்குதல் ஆகியவற்றின் மூலம் சமய மறுமலர்ச்சியை ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

''இந்து சமயத்தில் ஆத்மீகத்தை வளர்ப்பதில் சீதனப் பிரச்சினை ஒரு தடையாக உள்ளது. ஆத்மீக உணர்ச்சியை மக்கள் மத்தியில் வளர்த்து அவர்களின் உள்ளத்தைப் பக்குவப்படுத்தி மதனகோட்பாட்டை நிலைநிறுத்தவேண்டும். அப்பொழுதே இந்து சமய மறுமலர்ச்சி ஏற்பட்டுச் சமுதாய எழுச்சிதோன்றும்.'' (அ)

## விசாரணை ஒத்திவைப்பு

(மாவிட்டபுரம்)

சிமெந்துத் தொழிற்சாலையிலிருந்து சைக்கிள் திருடியதாக குற்றஞ்சுமத்தப்பட்டவர்தாம் சுற்றவாளி எனக் கூறியதால் வழக்கு, விசாரணைக்காக ஒத்திப்போடப்பட்டது.

காங்கேசன்துற சிமெந்துத் தொழிற்சாலையிலிருந்து 800 ரூபா பெறுமதியான சைக்கிளொன்றைத் திருடியதாக நீர்கொழும்பைச் சேர்ந்த நடராசா இராசதுரை என்பவர் மீது குற்றஞ்சாட்டி காங்கேசன்துறைப் பொலிசார் வழக்குத் தொடங்கியிருந்தனர் மல்லாகம் நீதிமன்றத்தில் இவ்வழக்கு விசாரணைக்கெடுக்கப்பட்டபோது மேற்படி நபர் சுற்றவாளி என்க்கூறினுர்.

இதனையடுத்து வழக்கை விசாரணை செய்வதற்காக மே மாதம் 31ம் திகதிக்கு நீதிபதி திரு. க. வி. விக்னேஸ்வரன் ஒத்திவைத்தார்.

# "பாரதிக்கு விழா எடுப்பது மட்டும் போதாது"

### - கோப்பாய் ஆ. ப.கல்லூரி விழாவில் அதிபர்

(யாழ்ப்பாணம்)

''பாரதியின் நூற்றுண்டு விழாவைமட்டும் கொண்டாடினுல்போதாது, அவரது சமுதாய சீர்திருத்தக் கொள்கைகளைப் பின்பற்றி நடக்கும் இலட்சியவாதிகளாக நாம் திகழவேண்டும்'' என்று கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி முத்தமிழ் மன்றத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட பாரதி நூற்றுண்டு விழாவில் பாரதியின் உருவப் படத்தைத் திரைநீக்கம் செய்துவைத்து உரையாற்றிய கல்லூரி முதல்வர் திருமதி இ. ஆனந்தகுமாரசுவாமி குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், பாரதியின் நூற்றுண்டு விழா அவர் பிறந்த மண்ணில் தமிழர் வாழ்கின்ற உலகின் பல நாடுகளிலும் கொண்டாடப்படுகின்றது. இந்த கௌரவத்திற்குக் காரணம் அவரது புரட்சிகரமான சுதந்தர விடுதலைக் கவிதைகளும், சமுதாய சீர்திருத்தக் கருத்துக்களும் தான்.

''இந்த நூற்றுண்டு விழா கொண்டாடுகின்ற நாம் பாரதியின் இரு சீர்திருத்தக் கொள்கைகளை எம்வாழ்நாளில் நிச்சயம் பின்பற்றவேண்டும். சாதி வெறி எமது சமுதாயத்தின் முன்னேற்றத்திற்குத் தடையாக அன்று தொடக்கம் இன்றுவரை இருந்துவருகிறது. சாதி அமைப்பை விரும்பாத பாரதி பிஞ்சு மழலைகளின் உள்ளத்தில் பதியும்படி 'சாதிகள் இல்லையடி பாப்பா' என்று பாடியுள்ளார். இதனைத்தான் நாம் எம்மிடம் கல்வி பயிலும் சிறுர்களுக்குப் போதித்து எல்லோரும் சமம் என்ற கருத்தை ஏற்படுத்தவேண்டும்.

''அடுத்து 'தனி மனிதனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம்'' என்றுர். ஆனுல் இவைகளை நாம் பின்பற்றி நடக்கின்றேமா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். பாரதிக்கு விழாக் கொண்டாடினுல்மட்டும்போதாது. எமது வாழ்க்கையில் அவரது கொள்கைகளைப் பின்பற்றி உண்மைத் தமிழனுக வாழ்ந்து எம்மிடம் கல்வி பயிலுகின்ற ஆயிரக்கணக்கான மாணவ உள்ளங்களில் பாரதி கொள்கைகளைப் பதியச் செய்து இலட்சிய வீரர்களாக உருவாக்கவேண்டும்.

''பாரதியின் எளிமையான உள்ளத்துடன் வாழவும்வேண்டும்.''

விரிவுரையாளர் திரு. வே. சுப்பிரமணியம் (முல்லைமணி) தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் விரிவுரையாளர் திரு. வை. சிவப்பிரகாசம் மற்றும் ஆசிரியமாணவர்கள் திரு. கோ. சந்திரசேகரம், திருமதி த. அருளானந்தம், திரு. அ. அரியகுமார் ஆகியோரும் பேசினர்.

சிறப்பு நிகழ்ச்சியாக பாரதி பாடல்களுடன் ''பாஞ்சாலி சபதத்தில் பாரதிகண்ட பாத்திரங்கள்'' என்ற பொருளில் கருத்தரங்கும் நடைபெற்றது. (உ)

## குற்றத்தை ஒப்புக்கொண்டார்

[மாவிட்டபுரம்]

திருட்டு வழக்கொன்றில் சந்தேக நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதால் தண்டனை வழங்குவது மார்ச் முதலாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

மயிலிட்டியைச் சேர்ந்த கலியுகராஜா என்பவரது வீட்டிலிருந்து சேட்டுகள், சாரங்கள் வேட்டிகள், சேலைகள் போன்ற பல பொருட்கள் திருடப்பட்டது தொடர்பாக மயிலிட்டி தோப்பூரைச் சேர்ந்த மு. விஜயரத்தினம் என்பவர் மீது குற்றஞ் சுமத்தி மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இவ்வழக்கு நீதிபதி திரு. க. வி விக்னேஸ்வரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட சமயம் சந்தேகநபர் தம் மீது சுமத்தப்பட்ட குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

இதனையடுத்து தண்டனை வழங்குவதை மார்ச் 1ம் திகதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார்.

பாரதி நூற்றுண்டில்

# பாரதியின் கொள்கைகளை மேற்கொண்டு வாழ்வோம்"

[அரியாலை]

''பாரதியார் ஒரு கவிஞன் மட்டுமல்ல, விடுதலைக்காக உழைத்த போராளியாகவும் தீர்க்கதரிசியாகவும் விளங்கினுர். தனது தனித்துவம் மிக்க கவிதைத்திறனுல் பாரத மக்களை எழுச்சியுறச்செய்து நாடு விடுதலை பெற வழிவகுத்தார்''.

இவ்வாறுயாழ் பரியோவான் கல்லூரியின் உவில்லியம்ஸ் மண்டபத்தில் நடைபெற்ற கல்லூரியின் மத்தியபிரிவு மாணவர் கூட்டத்தில் சித்திர ஆசிரியரும், பருத்தித்துறை நகரசபை உறுப்பினருமான திரு. என். தேவராசன் பேசுகையில் குறிப்பிட்டார்.

மத்திய பிரிவு அதிபர் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் ''பாரதியின் நூற்றுண்டு விழா கொண்டாடப்படும் இக்காலத்தில் சமூகத்தில் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற வேறுபாடு அற நாம் எல்லோரும் உழைக்கவேண் வேண்டும். மனிதர்கள் எல்லோரும் கடவுளின் குழைந்தைகள் என்று எல்லாச்சமயங்களும் கூறுகின்றன. நம்முள் நாம் பேதம் பாராட்டாமல், போட்டி, பொறுமை, உயர்வு தாழ்வு இன்றி பாரதி கூறுவது போல நாம் எல்லோரும் ஓரினம் என்ற குறிக்கோளுடனும், இலட்சியத்துடனும், வாழ வேண்டும். பாரதிகாட்டியபாதை நாட்டுவிடுதலையை மட்டுமல்ல, மனித விடுதலையையும் காட்டியுள்ளது. பாரதி நூற்றுண்டு விழக்கள் நடைபெறும் இக்காலகட்டத்தில் வாழும்நாம் பாரதியாரின் சிறப்பான கொள்கைகளை மேற்கொண்டுவாழ முயற்சி செய்வோமாக'' என்று குறிப்பிட்டார். (அ)

இலங்கை - இங்கிலாந்து கிரிக்கட்:

# இன்றும் நாளையும் கொழும்பில் இரு ஆட்டங்கள்

### வர்ணபுர தலைமை தாங்குகிறுர்

(கொழும்பு)

இலங்கைவந்துள்ள இங்கிலாந்து கிரிக்கட் கோஷ்டி இன்றும் நாளையும் கொழும்பில் இருநாள் ஆட்டங்களி இலங்கைக் கோஷ்டியுடன் மோதுகிறது.

கொழும்பு மெயிற்றலண்ட் பிளேஸில் உள்ள சிங்கள விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும் இரு ஆட்டங்களுக்கும் இலங்கைக் கோஷ்டிக்கு பந்துலவர்ணபுர தலைமைதாங்குகிறுர்.

இருஆட்டங்களிலும் கலந்து கொள்ளும் வீரர்கள் விபரம் வருவாறு:—

பந்துலவர்ணபுர (காப்டன்) டியூலிப் மென்டிஸ், அஜீத்டி சில்வா, ரேய்டயஸ், டி. சோமச்சந்திரடி சில்வா, லலித்களு பெருமா. ரஞ்சன் மடுகல்ல், அனுரா ரணசிங்கா, சிதாத் வெற்றிமுனி, அசந்தாடிமெல், ரேகண் ஜெயசேகரா. (இ)

மகாசிவராத்திரி

# கேதீஸ்வரத்தில் வ. பி. போ. சபை தண்ணீர்ப்பந்தல்

(மன்னுர்)

கடந்த வருடங்களைப்போல் இவ் வருடமும் திருக்கேதீஸ்வரத்தில் மகாசிவராத்திரி தினத்தன்று வடபிராந்திய போக்குவரத்துச்சபையினரால் தண்ணீர்ப்பந்தல் நடத்தப்படும்.

தண்ணீர்ப் பந்தலுக்கான நிதியை சேகரிப்பதில் வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் மன்னுர் சாலை திருக்கேதீஸ்வர தண்ணீர்ப்பந்தல் சபையைச் சேர்ந்த மூவர் ஈடுபட்டுவருகின்றனர்.

மன்னுர் சாலை திருக்கேதீஸ்வர தண்ணீர்ப்பந்தல் சபைத் தலைவராக திரு. ரி. உமாபதிசிவம், பொதுச்செயலாளராக திரு. எஸ். சண்முகநாதன், பொருளாளராக திரு. கே. சின்னத்தம்பி ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களுடன் 15 பேர் அடங்கிய நிர்வாகக்குழுவும் தெர்வுசெய்யப்பட்டுள்ளது.

# வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை கொட்டடி சித்தி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் இம்மாதம் 14ம் திகதி ஆரம்பமாகி 26ம் திகதி வரை நடைபெறுகிறது.

உற்சவ நாட்களில் பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா தினமும் கந்தபுராண இன்னிசை விருந்தளிப்பார்.

# நடேஸ்வரா வித்தியாலய குடிநீர்ப் பிரச்னை தீருகிறது

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை நடேஸ்வரா கனிஷ்ட வித்தியாலயத்திற்கு காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை 10 ஆயிரம் ரூபா செலவில் தண்ணீர்த்தாங்கி ஒன்றை அமைத்துக்கொடுக்க முன்வந்துள்ளது.

சிமெந்து தொழிற்சாலை தொழிலாளர்களது பிள்ளைகள் இவ் வித்தியாலயத்தில் அதிகமாக கல்வி கற்பதால் தொழிலாளர்கள் இதற்கு உதவி செய்யவேண்டுமென வித்தியாலய அபிவிருத்திசபை கோரியிருந்தது.

தொழிலாளர்கள்இக்கோரிக்கையை இலங்கை சிமெந்து கூட்டுத்தாபன தலைவர் திரு. அசோகா சோமரத்தினுவிடம் சமர்ப்பித்தனர்.

இதனைத்தொடர்ந்து 10ஆயிரம் ரூபா செலவில் இவ் வித்தியாலயத்திற்கு தண்ணீர் தாங்கி யொன்றை அமைக்க அவர் அனுமதி வழங்கினுர்.

இதனையடுத்து தண்ணீர் தாங்கி அமைக்கும் வேலைகள் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றன.

ஆண்டு நிறைவு

# விழா

(பண்டத்தரிப்பு)

சில்லாலை நல்லாயன் சனசமூக நிலையத்தின் 32வது ஆண்டு நிறைவு விழா இம் மாதம் 21ம் திகதி நடைபெறவுள்ளது. நிலையத் தலைவர் திரு. அ. ம. போ. புவனேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில் பிரதம அதிதியாக வட்டுக்கோட்டை தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு கலந்து கொள்வார்.

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு சு. நடராசா உட்பட மற்றும் பலர் இவ்விழாவில் உரையாற்றுவார்கள். (க)

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
10—30, 2—15, 4—45, 7—00, 9—30

**FIVE ANGRY WOMEN**

(கண்டிப்பாக வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10.30, 2.30, 6.15 9.30

இந்தியாவில் 100 நாட்களுக்குமேல் ஓடிய வெற்றிச்சித்திரம்

கமலஹாசன் - ரதி நடித்த

**உல்லாசப் பறவைகள்**

(ஈஸ்ட்மன் கலர்)

**ஸ்ரீதர்** தினசரி 10:30, 2:30, 6:00, 9:30
யாழ். நகர் சிவாஜி - ஜெயலலிதா

**பட்டிக்காடா பட்டணமா**

(புதிய பிரதி)

**வெலிங்டன்** தினசரி 4 காட்சிகள்
[யாழ்ப்பாணம்]
சுதாகர், ராதிகா நடித்த

**அன்னப்பறவை**

**WINDSOR** Daily
(JAFFNA) 10.30, 2.30, 4.30, 7.00, 9.30

13th and 14th Only
They didn't know his face-
They didn't know his name
But they'd never forget
The day he drifted into town-
Clint Eastwood—Unique Director in

**High Plain Drifters**

(Technicolor-Panavision)

15th and 16th only
The touch, terrifice TERENCE and the big
Bud in their new st smashing delight-Full of fun & Laughter

**ODDS AND EVENS**

17th to 19th only

**The Taxi Driver** (Strictly for adults)

**யாழ். றீகல்** தினசரி 10—30, 2—30, 6—15, 9—30 நான்குகாட்சிகள்

அன்று ''பாசமலரை''த் தந்தார் K.P. கொட்டாரக்கரா
நேற்று ''பசி''யைத் தந்தார் இயக்குனர் துரை
இன்று இருவரும் இணைந்து தருகிறார்கள்.




நிறம் மாறாத பூக்கள் புகழ் **விஜயன் ★ ராஜேஷ்**
சுருளிராஜன், மாஸ்டர் ரவிக்குமார்
சத்தியகலா, சுவர்ணலதா
(ஈஸ்ட்மென் கலர்)
டைரக்ஷன்:- ''நீயா'' புகழ் துரை


# "காரிலிருந்து இறங்கிய எதிரி ஸ்ரீஸ்கந்தராசாவைச்சுட்டார்"

## அல்லைப்பிட்டிக் கொலைவழக்கில் சாட்சியம்

(ஊர்காவற்றுறை)

''காலம் சென்ற ஸ்ரீஸ்கந்தராசாவை எனக்குத் தெரியும். அவர் யாழ்ப்பாணத்தில் வசித்துவந்தார். எதிரியையும் எனக்கு நன்ருகத் தெரியும் கடந்த வருடம்8ம்மாதம் 15ந் திகதி பிற்பகல் 4 மணியளவில் நான் ஒரு செத்தவீட்டுக்குப் போய் வந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். சிவஞானத்தின் வீடு எனது வீட்டிற்கு மேற்குப் பக்கத்தில் உள்ளது. அந்த நேரம் நான் ஏ40 கார் ஒன்றினைக்கண்டேன் அந்தக் கார் வீதியில் கிழக்குமுகமாக நின்றது. அதில் எதிரியான தனபாலசிங்கமும் சந்திரனும் இறங்கி சிவஞானம் வீட்டிற்கு சென்ருர்கள். 5 நிமிடங்களின் பின் திரும்பவும் காருக்கு வந்தார்கள் இவர்கள் சிவஞானத்தின் வீட்டில் இருந்து திரும்பிவரும் போது தனபாசிங்கத்தின் கையில் துவக்கு இருந்ததைக்கண்டேன். அப்போதும் நான் சாப்பிட்டுக் கொண்டுதான் இருந்தேன். அப்போது தெற்குப்பக்கமாய் இருந்து சத்தம் கேட்டது. நான் வெளியே வந்தேன் அந்நேரம் தனபாலசிங்கம் கீழாகவும் இறந்த ஸ்ரீஸ்கந்தராசா மேலாகவும தள்ளுப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அந்நேரத்தில் எதிரியிள் கையில் துவக்கு இருந்தது.''

இவ்வாறு துப்பாக்கிச்சூட்டுகொலைவழக்கில் சாட்சியமளித்த பிலிப்பையா என்பவர் கூறினர். ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நீதிபதி திரு. ரி. கே. திலகன் முன்னிலையில் ஆரம்பமான இவ்வழக்கில் சாட்சி மேலும் கூறியதாவது:

எனதுமகன் ஜெயக்கொடியும் சந்திரன் என்பவரும் அத்துவக்கை 'விடு விடு' என்று இழுத்துக்கொண்டிருந்தார்கள் கடைசியில் துவக்கு ஜெயக்கொடியின் கையில் வந்தது. நான் எதிரிக்கும் ஸ்ரீகந்தராசாவக்கும் அறிவுரை கூறிய பின் இருவரும் எழுந்து நின்ருர்கள். நான் கூறிய புத்திமதியின் பேரில் இறந்தவர் கிழக்குப்பக்கமாகவும் எதிரியும் சந்திரனும் நிற்பாட்டப்பட்டிருந்த கார் நின்ற பக்கமாகவும் போனுர்கள். காரடிகுப்போகுமுன் எதிரி தனது துவக்கெனக்கூறி எனது மகனிடமிருந்த துவக்கை வாங்கிக் கொண்டார்' எதிரி எழுந்து 'போகும் போது அவரின் சேட்டின் பின்பக்கத்தில் இரத்தம் இருந்ததைக் கண்டேன். அப்போது அவர் காருக்குள் இருந்த தோட்டாவை எடுத்து துவக்குக்குள் போட்டார். அப்போது நான் 'தம்பி இது செய்யக் கூடாத வேலை'யெனக் கூறினேன். அவர் சத்தம்போடவேண்டாமெனக்கூறி துவக்கால் அடிக்க ஓங்கினர். நான் ஒன்றும் கதைக்கவில்லை. எதிரி காரிலிருந்து இறங்கி ஸ்ரீஸ்கந்தராசாவுக்குச்சுட்டார். வெடிபட்டதும் ஸ்ரீஸ்கந்தராசா கீழே விழுந்துவிட்டார்.

''பின் அவர் இன்னெரு தோட்டாவைப் போட்டுக் கொண்டு இறந்தவர் விழுந்து கிடந்த இடத்துக்குக் கிட்டப் போனுர். நானும் பின்னல் சென்றேன். நான் செல்லும் போது எதிரி ஸ்ரீஸ்கந்தராசாவுக்கு அருகில் நின்று அந்தத் துவக்கைத் திரும்பவும் ஸ்ரீஸ்கந்தராசாவின் நெஞ்சுக்கு எதிராக இன்னெரு தரம் சுட்டார். நான் இன்னெருதரம் சுட்டுவிட்டாயோ எனக் கதறினேன். கதறும்போது எதிரி சாட்சியம் சொன்னல் உனக்கும் இதேகதிதான் என எச்சரித்தார். பின் எதிரி அந்தக் காரடிக்குப் போய்விட்டார். அந்தக் காரின் இலக்கம் — சி. என். 9525. எதிரியும் சந்திரனும் அந்தக் காரில் போய் விட்டார்கள். நான் வீட்டுக்குச் சென்றுவிட்டேன். அன்று இரவு பொலிசார் என்னை விசாரித்தார்கள். எனது வாக்கு மூலம்பதிவுசெய்யப்பட்டது.''

யாழ்ப்பாணம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் திரு. நவரத்தினராசா சாட்சிகளை நெறிப்படுத்தினர். எதிரியின் சார்பில் சட்டத்தரணி திரு. ந. ஸ்ரீகாந்தா ஆஜரானர்.

இவ்வழக்கில் கந்தர்மடத்தைச் சேர்ந்த ஸ்ரீஸ்கந்தராசா என்பவரை அல்லைப்பிட்டியில் வைத்துத் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ததாக அதே இடத்தைச் சேர்ந்த கந்தையா தனபாலசிங்கம் என்பவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

(அ)

## இன்றைய பலன்

மாசி மாதம் 1ம் திகதி
சனிக்கிழமை
(13—2—82)

மேடம்: குடும்பவழியால் மனதுக்கு நிம்மதி பிறக்கும், நீண்ட நாள் பூமிப்பிணக்கு இன்று சமரசமாக முடியும், காதல் விவகாரங்களுக்கு இடமுண்டு, சிறப்பானதினம்.

இடபம்: பிரயாணத்தில் பொருள் நழுவக்கூடும், சிலருக்கு உடல் நலமும் பாதிக்கப்படலாம், நம்பிக்கை வைப்பதன்மூலப் பணம் பறிபோகலாம், புதிய தொழில்களை இன்று பின்போடவும்.

மிதுனம்: பொதுப்பணி உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும், சிலர் வாழ்க்கையில் அரசியல் பிரவேசத்துக்கும் நாள் நிச்சயிக்கப்படலாம், தந்தை வழிமூலம் ஆதரவும் பெருகும், செல்வாக்கும் வளர்ச்சியடையும்.

கடகம்: தொழில் புரியும் இடத்தில் செல்வாக்குப் பெருகும், மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும், உல்லாசப் பயணமொன்றும் திட்டமிடப்படலாம், பொருள் வரவும் உண்டு.

சிங்கம்: அதிர்ஷ்டதேவதையின் அணைப்பு உங்களுக்குக் கிடைக்கலாம், திரைப்படத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு உற்சாகமளிக்கக் கூடும், செல்வாக்கு உள்ளவரின் ஆதரவு தப்பாமல் உண்டு.

கன்னி: வாழ்க்கை மந்தநிலையில் நடைபெறும், எதிர்பாராத தடைகளால் முன்னேற்றம் தடைப்படும், சகோதரவழிமூலம் சஞ்சலமான செய்தியும் கிடைக்கலாம், உடல் நலத்தைப் பேணவும்.

துலாம்: உமது சொந்த வாழ்க்கையில் மற்றவர்கள் தலையிடுவார்கள், குடும்பத்தில் சிறுபூசல்கள் தோன்றி மறையும்.

விருச்சிகம்: இதயம் இன்பத்தால் விம்மும், இல்லத்திலும் இனிமை தவழும், உறவினர் மத்தியில் செல்வாக்குப் பெருகும்.

தனு: சகோதரவழியால் மனதில் சஞ்சலம் தோன்றக்கூடும், உள் வீட்டிலேயே பூசல்கள் தலைதூக்கும், உசாராக இருக்கவேண்டும்.

மகரம்: அறிஞர்கள் சந்திப்பு இன்று நிகழும், அறவழியில் ஆர்வம் பிறக்கும், ஆக்கப்பணியில் கவனம் செலுத்தவும்.

கும்பம்: மகிழ்ச்சிதரும் செய்தியொன்று கிடைக்கக்கூடும், பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர், குடும்பத்தில் உறவு மிகவும் நெருங்கியதாக இருக்கும், அறவழிகளில் நாட்டம் ஏற்படும்.

மீனம்: உங்கள் நடவடிக்கைகள் அனைத்தும் இன்று வேவு பார்க்கப்படும், தொழில்துறையில் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு சதி நடைபெறலாம், அகால போசனத்தின் மூலம் வயிற்றுக்கோளாறு ஏற்படலாம்.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## சிவராத்திரி விழா

[சித்தன்கேணி]

சித்தன்கேணி சிவசிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் இம்முறையும் வழமைபோல் சிவராத்திரிவிழாவை ஒட்டி விசேட பூஜை அபிஷேகங்கள் நடைபெற உள்ளன.


**Rajah** Daily 10—30, 2—00, 4—30,
JAFFNA 7—00, 9—30

BUDSPENCER in

**FIVE MAN ARMY**

(Color-Scope)

குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்
**வஸ்லி** மானிப்பாய்
தினசரி: 2.30 6.15 9 15
**நூல்வேலி**

**சாந்தி** (யாழ். நகர்) 10—30, 2—30, 4—45
7—00: 9—30

JIM BROWN, JIM KELLY
FRED WILLIAM SON

**Three The Hard Way**

(Action-color-adults)

Await: HORROR EXPRESS

**ஹரன்** யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்...ஜெய்சித்ரா
நடித்த
கலைஞர் மு. கருணாநிதியின்
**வண்டிக்காரன் மகன்**

# வரி விளம்பரம்

### வாடகைக்கு

யாழ். வளாகச் சந்தியில், வீட்டுக் கட்டிடம் வியாபார ஸ்தலமாகப் பாவிப்பதற்கு உண்டு. சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் தொடர்புகொள்ளவும்: தனபாலசிங்கம், வளாகச் சந்தி, திருநெல்வேலி. 2261

கொக்குவில் பழைய ஸ்ரேசன் வீதியில் (ஆடியபாதம் வீதி) 100ம் இலக்கத்தில் சகல நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்ட புதிய வீடு உடனடியாக வாடகைக்கு உண்டு. விபரங்களுக்கு; மு. வ. இராசரத்தினம், ''திருச்சுழி'' ஞான வைரவர் கோயிலடி உரும்பராய் தெற்கு. 2219

### தேவை

மா அரைக்கும் யந்திரத்தில் (கிறைண்டர்) வேலை செய்ய, நல்லொழுக்கமும், அனுபவமும் உள்ள ஒருவர் தேவை, முன்பு வேலைசெய்த ஸ்தாபனத்தின் சான்றிதழ்கள், நற்சாட்சிப்பத்திரங்களுடன் நேரில் வரவும். எஸ். சுப்பிரமணியம் கொம்பனி 191 (53), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 2243

யாழ்ப்பாணத்தில் தயாராகும். வீடியோ (TV) திரைப் படத்தில் நடிப்பதற்கு நடிகைகள் தேவை. புகைப்படப் பிரதியுடன் கடித மூலம் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 2246 C/o ஈழநாடுலிமிட்டெட், யாழ்ப்பாணம். 2246

## அறிவித்தல்

தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கத்தில் 6000 க்கு மேற்பட்ட வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்குண்டு. ரூ. 250/— வைப்புப் பணமாக தலைமைக் காரியாலயத்தில் செலுத்தி கேள்விப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரம் 19—2—82ம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 4.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் பொதுமுகாமையாளர், தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம், தெல்லிப்பளை என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். தபால் உறையின் இடது பக்கத்தில் ''வெற்றுச் சாக்குக் கேள்விப் பத்திரம்'' எனக் குறிப்பிடப்படல் வேண்டும். கேள்விப்பத்திரம் 17—3—82 புதன்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு சங்க உபசபையினரின் முன்னிலையில் திறக்கப்படும்.

**பொதுமுகாமையாளர்**

தெல்லிப்பளை
ப. நோ. கூ. சங்கம்,
தெல்லிப்பளை.
10—2—82 (2252)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

### FOR SALE

11 Sri series Toyota corolla KE 20 showroom condition. Owner leaving abroad Shantha, c/o Dr. T, Gangadharan, Van-West Clinic, Vannarponnai. Telephone 7887. (2265)

### பயிற்சி

எலக்றிக்கல் வயரிங் டிப்பிளோமா பயிற்சி 01—03—82 ஆரம்பமாகின்றது. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னேலொஜி, 9, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2256

### விற்பனைக்கு

உள்ளூரில் தயாரிக்கப்பட்ட நல்ல நிலையிலுள்ள தச்சுப்பட்டடை இயந்திரம் ஒன்று விற்பனைக்குண்டு. பார்வையிடவும், தொடர்புகளுக்கு: நாதன் தச்சுத் தொழிற்சாலை, பாரதி லேன், கச்சேரி நல்லூர் ரோட், யாழ்ப்பாணம். 2266

ஆஸ்பத்திரி வீதியில் வீடு உடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: திருமதி R. ஜெகநாதன், 729, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம. 2254

வீடு கட்டுவதற்குகந்த ஒன்றரைப் பரப்பு சதுரக்காணி, யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் புகையிரத நிலையத்திற்கு அண்மையாக விற்பனைக்குண்டு. நேரடியாக தொடர்புகொள்ளவேண்டிய விலாசம்: 713, ஆஸ்பத்திரி ரோட், யாழ்ப்பாணம். 2257

நிலை, கதவுகள், கோப்பிசங்கள், பனம் தீராந்திகள், தூண்கள், மற்றும் தேவையான மரங்கள், யன்னல்கள் விற்பனைக்குண்டு. பார்வையிட்டு விலை பேசிக்கொள்ளலாம். செ. வாசுதேவன், 36, யாழ வீதி, யாழ்ப்பாணம். 2259

அரசாங்க உத்தியோகத்தர் உபயோகிக்கும் நல்ல நிலையில் உள்ள ஒஸ்டின் கேம்பிரிஜ் கார் (A 50 விற்பனைக்குண்டு. கரிச்சந்திரன், 7ம் கட்டை ஒழுங்கை, மல்லாகம். 2262

நல்லூர் கந்தசாமிகோவிலுக்கும், முத்திரைச் சந்தை பிரதான பஸ்நிலையங்கட்கும் அண்மையில் பண்டாரக்குளம் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் 100 பனைமரங்களைக் கொண்ட ஐந்தரைப் பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்கட்கு இல. 71, அரசடி வீதி, நல்லூர் யாழ்ப்பாணம், அல்லது நடராசா, ஆஸ்பத்திரி செங்கல்லடியை தொடர்பு கொள்ளவும். 2231

கணேஸ்வரி குணபாலசிங்கம் கொக்குவில் கிழக்கு பழைய தபாற்கந்தோர் ஒழுங்கையில் (K.K.S. வீதிக்கு அண்மையில்) $1\frac{1}{2}$ பரப்புக்காணி விற்பனைக்குண்டு மேற்கூறிய முகவரியில் தொடர்புகொள்ளவும். 2240

யா/ஸ்ரீசோமாஸ்கந்தக் கல்லூரி-புத்தூர்
பாடசாலை அபிவிருத்திச் சபை

## விசேட பொதுக்கூட்டம்

காலம்: 1982—02—14 ஞாயிற்றுக்கிழமை
காலை 9—30
இடம்: கல்லூரி மண்டபம்.
அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.
(2268) செயலாளர்.

# சுதந்திரத்தை மக்களின் தாகமாக்கினுர் பாரதி

## யாழ். மத்திய கல்லூரி விழாவில் அரசாங்க அதிபர் உரை

(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் அரசியல். கலை, கலாசாரம் அனைத்திற்கும் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய மகாகவிபாரதியார் அந்நாட்டின் சுதந்திரத்தை மக்களின் தாகமாக மாற்றினுர். இதுவே அவரது சிறப்பு இயல்பாகும்.

இவ்வாறு யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா தெரிவித்துள்ளார்.

யாழ். மத்திய கல்லூரியில் கல்லூரி அதிபர் திரு. என். எஸ். இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெற்ற பாரதி நூற்றுண்டு விழாவை ஆரம்பித்துவைத்து உரையாற்றிய திரு. தேவநேசன் நேசையா மேலும் கூறியதாவது:—

சுப்பிரமணிய பாரதியார் சமுதாயத்தின் மறுமலர்ச்சிக்குத் தலைசிறந்தசாரதியென்றே கூறவேண்டும். எட்டயபுரத்திலே பிறந்த பாரதியார் தமது புலமைத் திறமையினுல் ஓர் உலகம் போற்றும் மகா கவிஞராகவும், தேச பக்தனுகவும் காணப்படுகின்றுர். அவர் எவ்வித வித்தியாசமும் காட்டாமல் அனைவரையும் அன்பாகவும், பண்பாகவும், பிறருடைய துன்பத்தைத் தனது துன்பமாகக் கருதி வாழ்ந்தும் வழி காட்டியும் உள்ளார்.

அவர் வாழ்ந்த காலத்திலே இந்திய நாட்டின் தலைவர்கள் அனைவர்களினுலும் நன்கு நன்கு போற்றப்பட்டார்.

பாரதியார் பாமர மக்களின் மனப்பாங்கை நன்கு அறிந்தவர். தமிழன் சிறந்து வாழ வேண்டுமானுல், சாதிப் பிரச்சனை தீர்க்கப்படவேண்டும். 'சாதிகள் இல்லையடி பாப்பா' என்று குழந்தைகளுக்கே கூறியுள்ளார்.

பாமர மக்கள் இலகுவாக அறிந்து கொள்ளுவதற்கு ஏற்றமுறையில் இலக்கியத்திற்கும் புத்துயிர் அளித்தார். என்னும் கருத்தை பேராசிரியர்களும் ஒத்துக்கொள்வார்கள் என நான் நம்புகியேன். புதிய ஆத்திசூடி தொடக்கம் பாஞ்சாலி சபதம் வரை பாரதியார் பாடி இருப்பது இதற்கு எடுத்துக்காட்டாகும். (இ)

### வவனியா மா அ சபை நிறைவேற்றுக் குழுக்கூட்டம்

(வவனியா)

வவனியா மாவட்ட அபிவிருத்தி சபை அலுவலகத்தில் நடைபெற்றுவந்த நிறைவேற்றுக் குழுக்கூட்டம் தொடர்ந்து மாவட்ட அமைச்சரின் அலுவலகத்தில் நடைபெறும் என்று அபிவிருத்திசபைத்தலைவர் திரு. எம். சிற்றம்பலம் தெரிவித்தார்.

வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம், திரு. எம். சிற்றம்பலம் ஆகிய இரு கூட்டணி உறுப்பினர்களும், வவனியா மாவட்ட அமைச்சர் திரு. ஜி. டி. மகிந்தசோமாவுக்கு விபரத்தினை விளக்கிய பின்னரே நிறைவேற்றுக்குழு கூட்டம் அபிவிருத்திசபை அலுவலகத்தில் நடைபெற்றது. மாவட்ட அமைச்சரின் செயலாளரும். அரசாங்க அதிபருமான திரு. கே. ஸி. லோகேஸ்வரனும் கலந்து கொண்டார்.

### ஒருவருட கடூழியம்

(மாவிட்டபுரம்)

திருட்டுக்குற்றச் சாட்டு சுமத்தப்பட்ட இருநபர்கள் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டதால் இருவருக்கும் தலா ஒருவருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

அச்சுவேலியில் வீடொன்றினுள் புகுந்து உழவு யந்திர உதிரிப்பாகங்கள் உட்பட பல்வேறு பொருட்களை திருடியதாக செல்லத்துரை சிவசங்கர் என்பவர் மீதும், காங்கேசன்துறை மாம்பிராயைச் சேர்ந்த ஐயாத்துரை பூரணம் என்பவரது வீட்டிலிருந்து பெறுமதிவாய்ந்த சேலைகளைத் திருடியதாக கரணவாயைச் சேர்ந்த வடிவேலு சிவகுமார் என்பவர்மீதும் காங்கேசன் துறைப்பொலிசார் மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குகளை தொடர்ந்திருந்தனர்.

இவ்வழக்குகள் நீதிபதி திரு. க. வி. விக்கினேஸ்வரன் முன்னிலையில் எடுக்கப்பட்ட சமயம் எதிரிகள் தம்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை ஒப்புக்கொண்டனர். இதனையடுத்து நீதிபதி இருவருக்கும் தலா ஒருவருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

### சீனித் தட்டுப்பாடு

(மன்னுர்)

மன்னுரில் சீனிக்குப் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் பாவனையாளர்கள் பெரும் பாதிப்புக் குள்ளாகியுள்ளனர்.

மன்னுர் பல நோ. கூ. சங்கம் சீனியைக் கொள்முதல் செய்யாததாலேயே இத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சீனித் தட்டுப்பாட்டைப் பயன்படுத்தி தனிப்பட்ட வியாபாரிகள் சீனிவிற்பனையில் கோள்ளை லாபம் பெற்றுவருவதாக பாவனையாளர்கள் புகார் தெரிவ்க்கின்றனர். (இ)

### ஓடு பிரித்துத் திருட்டு

(மன்னுர்)

இரவு நேரம் வீட்டில் ஆளில்லாத சமயம் பார்த்து ஓடு பிரித்து வீட்டினுள் இறங்கிய திருடர்கள் 5 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை திருடிச் சென்றுள்ளர்.

மன்னுர்பறங்கித் தெருவைச் சேர்ந்த ரங்கநாதன் என்பவரது வீட்டிலேயே 3 ஆயிரம் ரூபா ரொக்கப்பணம் உட்பட 5ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

இத்திருட்டுச் சம்பவம் பற்றி மன்னுர் பொலிசில் புகார் செய்யப்பட்டதையடுத்து மன்னுர் பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

### யாழ். இந்து - மானிப்பாய் இந்து கிரிக்கட் போட்டியில் வெற்றி தோல்வியில்லை

(அரியாலை)

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கும், மானிப்பாய் இந்துக் கல்லூரிக்குமிடையே மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறற கிரிக்கெட் போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

மானிப்பாய் இந்துக்கல்லூரி முதலாவதுஆட்டத்தில் எல்லா விக்கட்டுகளையும் இழந்து 100 ஓட்டங்களைப் பெற்றது. இக் கோஷ்டியில் விளையாடிய செல்வன்கள் எஸ். ஜெயசீலன், எஸ். பசீதரன் ஆகியோர் முறையே 25, 25 ஓட்டங்களைப் பெற்றனர். இவர்களை எதிர்த்துப்பந்துவீசியசெல்வன் எம். சிவராமன் 16 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கட்டுகளையும், செல்வன் ஜே. பாலகுமார் 21 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கட்டுகளையும் கைப்பற்றினர்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி முதலாவது ஆட்டத்தில் எல்லா விககட்டுகளையும் இழந்து 142 ஓட்டங்களைப் பெற்றது. இக் கோஷ்டியைச் சேர்ந்த செல்வன் எஸ். மண்டலேஸ்வரான், எஸ். சரவணபவன் ஆகியோர் முறையே 6, 27 ஓட்டங்களைப் பெற்றனர். இவர்களை எதிர்த்துப் பந்து வீசிய செல்வன் எஸ்: பாலகுமார் 33 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கட்டுகளைக்கைப்பற்றினுர்.

மானிப்பாய் இந்துக்கல்லூரி இரண்டாவது ஆட்டத்தில் 9 விக்கட்டுகளை இழந்து 190 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இக் கோஷ்டியைச் சேர்ந்த செல்வன்கள் கே. பஜந்தகுமார், ஆர். ஸ்கந்தராசா, ஆகியோர் முறையே 55, 42 ஓட்டங்களைப் பெற்றனர். இவர்களை எதிர்த்துப் பந்துவீசிய செல்வன் எஸ். கே. பாலகுமார் 45 ஓட்டங்களைக் கொடுத்து 2விக்கட்டுகளையும், செல்வன் கே. குகானந்தன் 33 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கட்டுகளையும் கைப்பற்றினர்.

யாழ். இந்துக்கல்லூரி இரண்டாவது ஆட்டத்தில் ஒரு விக்கட்டை இழந்து 45 ஓட்டங்களைப்பெற்று நேரம்முடிவடைந்ததால் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. இக்கோஷ்டியைச் சேர்ந்த செல்வன் எஸ். கே. பாலகுமார் ஆட்டமிழக்காமல் 17 ஓட்டங்களையும், செல்வன் எஸ். விஷயலக்ஸ்மன் 15ஓட்டங்களையும் பெற்றனர். போட்டி வெற்றி தோல்வியின்றிமுடிவடைந்தது

### நூல்கள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்நூலகத்திற்கு கந்தர்மடத்தைச் சேர்ந்த ஓய்வுபெற்ற இலங்கை வங்கி பிரதம சிறுப்பர் திரு, தம்பிப்பிள்ளை கதிரவேற்பிள்ளை நூற்றுக்கு மேற்பட்ட நூல்களைக் கொண்ட தொகுதி ஒன்றை அன்பளிப்பாக வழங்கினுர்.

யாழ். மேயரிடம் நேற்றுக் காலை இந்த அன்பளிப்பு வழங்கப்பட்டது.

## வீட்டுக் கிரியை

### அமரர் கந்தையா கனகரத்தினம்

1982-01 25ம் திகதி அமரரான காரைநகர் வியாவிலைச் சேர்ந்த திரு. கந்தையா கனகரத்தினம் அவர்களின் இறுதிக்கிரியைகளில் பங்குகொண்டோருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், அன்னார் நோய்வாய்ப்பட்டிருந்தபோது பல வகைகளிலும் உதவி புரிந்த தெல்லிப்பழை மற்றும் யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலைகளைச் சேர்ந்த சகலதர ஊழியர்கட்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன் 1982-02-14ம்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை முதல் நடைபெறவுள்ள அன்னாரின் வீட்டுக்கிரியைகளிலும் பங்குகொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

**திருமதி கனகரத்தினமும், குடும்பமும்.**
மாவட்ட வைத்திய அதிகாரி விடுதி,
அரசினர் வைத்தியசாலை, தெல்லிப்பழை. 2267

## ஆலயத்தில் திருட்டு

(சங்கானை)

சங்கானை வெல்வில் இலுப்பைத்தாழ் முருகமூர்த்தி கோவிலின் தெற்குப்புற வாசல் உடைக்கப்பட்டு ஆதி மூலத்திலுள்ள முருகமூர்த்தி, வள்ளி, தெய்வானை விக்கிரகங்களின் நகைகளும், தங்க யந்திரமும், வெள்ளிவேலும் உண்டியல் பெட்டியில் உள்ள பணமும் களவாடப்பட்டுள்ளது.

உள்வீதியிலுள்ள பிள்ளையார் கோவில் பகுதி வாசலையும் உடைப்பதற்கும், திருட முயற்சித்ததாகவும், ஆனல் முயற்சி பலனளிக்காதுபோய் விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதுசம்பந்தமாக ஆலய நிர்வாகி திரு. கே. செல்வநாயகம் காங்கேசன்துறைப் பொலிசாருக்குப் புகார் செய்ததைத் தொடர்ந்து சார்ஜன்ட் சுந்தரராஜன் தலைமையில் ஒரு பொலிஸ் கோஷ்டி ஆலயத்தின் களவு போன இடங்களைப் பார்வையிட்டு சந்தேக நபர்களைத் தேடி வலை விரித்துள்ளது.

## சதிமுயற்சி: 4பேர் கைது!

மனிலா, பெப். 12

பிலிப்பின்ஸ் அரசாங்கத்தை கவிழ்க்க மூன்று வருடங்களுக்கு முன்னர் சதி முயற்சி மேற்கொண்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது (வெ)

### அறங்காவல் குழுவை கலைக்க கோரிக்கை

சென்னை, பெப். 12

திருச்செந்தூர் ஆலய அறங்காவல்குழுவை கலைக்கவேண்டுமென்று தமிழ்நாட்டு சட்டப் பேரவையில் இன்று எதிர்கட்சிகள் வலியுறுத்தினர்.

திருச்செந்தூர் ஆலய தர்மகர்த்தா திரு. சுப்பிரமணியபிள்ளை மரணமானதும், இது தொடர்பாக ஆராய போல் கமிஷனை தமிழ்நாடு அரசு நியமித்திருந்ததும்தெரிந்ததே. (வெ)

### போல் கமிஷன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மீதான விவாதம் தமிழ்நாடு சட்டப்பேரவையில் ஆரம்பமாகியது.

இவ்விவாதத்தின்மீது தி.மு.க. உறுப்பினர் திரு.கிருஷ்ணசாமி, காந்தி காமராஜ் காங்கிரஸ் உறுப்பினர் திரு. குமரி அனந்தன் ஆகியோர் உரையாற்றினர். (வெ)

### ஷாவின்..-

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். அவர் அவ்வறிக்கையில், அமெரிக்காவின் போக்கை நம்பி மன்னர் ஹுசைன் தவறான வழியில் செல்லக்கூடாதென்றும், ஜெரூஸலமை மீட்பதில் அவர் முன்னிற்கவேண்டுமென்றும் தெரிவித்துள்ளார். (வெ)

### இஸ்ரேலைக் கண்டிக்கும் தீர்மானம்

நியூயோர்க், பெப், 12

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழு இஸ்ரேலைக் கண்டிக்கும் மூன்று தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. (வெ)

### பங்களாதேஷ்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

42 உறுப்பினர்களைக்கொண்ட முன்னைய அமைச்சரவையை நேற்றுஜனுதிபதி அப்துல் சதார் கலைத்திருந்தது தெரிந்ததே. (வெ)


## ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்
## உல்லாச பஸ் சேவை

கண்ணியமான, பாதுகாப்பான பஸ்சேவை

**யாழ் - கொழும்பு: செவ்வாய், வியாழன், ஞாயிறு**

**கொழும்பு - யாழ்: திங்கள், புதன், வெள்ளி.**

**யாழ்ப்பாணத்தில் டிக்கட் பெறுமிடங்கள்:**

(1) ஹோம் பினன்ஸ் லிமிட்.
இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 8310

(2) யாழ். ஐக்கிய வியாபார சங்கம்
420 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
போன் — 370, — 438, — 537.

(3) யாழ். மெட்டல் சேல்ஸ் சென்ரர்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 7596.

(4) குயிக் ட்ரவல்ஸ் அன்ட் டூர்ஸ்
சரஸ்வதி கார்டின்ஸ், சேர்ச்லேன், சாவகச்சேரி.
தொலைபேசி இல: 273, சாவகச்சேரி

**கொழும்பில் டிக்கட் பெறும் இடங்கள்**

ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்
463, காலிவீதி, கொள்ளுப்பிட்டி.
தொலைபேசி இல: 89190.

ரவிந்திரா ஸ்டோர்ஸ்
285, காலி வீதி, வெள்ளவத்தை.

லங்கா பம்பே சுவீட் ஹவுஸ்,
இல. 105, ஓல்கொட் மாவத்தை, புறக்கோட்டை.
தொலைபேசி இல. 22830

ஸ்ரீ மணிமலர் ஸ்டோர்ஸ்
இல. 157/2, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு-11.
தொலைபேசி இல. 23277.

நியூ புஷ்பா ஸ்டோர்ஸ்
127, காலி வீதி, பம்பலப்பிட்டி.
தொலைபேசி இல: 88866.

**கட்டணம் ரூபா 65-00**



### தேவை

யாழ். நகரில் பிரபல்யமான ஒரு தொழிற்சாலைக்கு, பி. வி. சி. (PVC) பைப் இணைப்புக்கள் தயாரிக்கும் வேலையில் அனுபவம் உள்ளவர்கள் உடன் தேவை. தகைமைகளுடன் நேரில் வரவும்

**தேவி கடைச்சல் நிலையம்**
(மக்கள் வங்கி அருகாமையில்)
ஸ்டான்லி வீதி,
யாழ்ப்பாணம். 2273



## தங்க நகைகளுக்கும் தங்க கட்டிகளுக்குமான பணவசதி

**த பினன்ஸ் கம்பனி**
வழங்கும் மற்றுமொரு புதிய திட்டமாக
தங்க நகைகளுக்கும்,
தங்க கட்டிகளுக்குமான
பணவசதி

வழங்க முன்வந்துள்ளது. உங்களுக்கு பண நெருக்கடி ஏற்படும்போது, எம்முடன் கலந்தாலோசித்து, தவணை முறையிலோ, குறிப்பிட்ட கால எல்லையிலோ, பணத்தைச் செலுத்தி உங்கள் தங்க நகைகளையோ அல்லது பவுண் கட்டிகளையோ பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு:

விற்பனை முகாமையாளர்,

## த பினன்ஸ் கம்பனி லிமிட்.

249, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

போன்: 7680



**42 வருட அனுபவத்துடன், நாடெங்கும் கிளைகளுடன்**
நம்பிக்கையின் சின்னமாக, உங்கள் பணத்தைப் பத்திரமாய் பாதுகாத்து
உயர்ந்த வட்டியுடன் தரும் நிதிநிறுவனமான

TFC

## த பினன்ஸ் கொம்பனி லிமிட்டெட்

**யாழ்ப்பாணக் கிளை தனது**
**6-வது ஆண்டுவிழாவைக் கொண்டாடும்முகமாக**
உங்கள் அபிமான திரைப்பட, வானொலிக் கலைஞர்கள் பங்குபற்றும்

# 'த பினன்ஸ் நைற்'

(பல்சுவைக் கதம்ப நிகழ்ச்சி)

**இன்று** (13-2-1982) சனி மாலை 6-30 மணிக்கு
யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில்
திரு. தேவநேசன் நேசையா (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) அவர்கள் தலைமையில் நடைபெறும்.
(வாடிக்கையாளர்கள் அன்புடன் அழைக்கப்படுகிறார்கள்)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 303 ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் பெப்ரவரி மீ 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as NewsPaper. The General P.O..Sri Lanka Regd. Q B.10/236/81. P.O. Box 49, Jaffna. தொலைபேசி 7707, 389, 8126.